[illegible]

V. 4 No. 50 17 [illegible] 1931


JL
m211,N28 KN
N31.4.50
188948

KALANILAYAM                                                   தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol. 4.]          1931ஞ டிசம்பர் மீ 17உ          [No. 50

8 - JAN 1932

பொருளடக்கம்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 981 | 5. | களவியற் காரிகை | |
| | | | | S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. | 989 |
| 2. | கந்தபுராணமும் சங்க நூல்களும் | | 6. | கம்பராமாயணம் (திருவடி சூட்டு படலம்) | |
| | பண்டிதர் R. திம்மப்பா ஐயர் | 983 | | T. N. சேஷாசலம் B.A. B.L. | 991 |
| 3. | நவராத்திரி—(ஓர் நாடகம்) | | 7. | வர்த்தமானம். | 995 |
| | K. N. சுந்தரேசன் B.A. (Hons) | 985 | 8. | அட்டவணை | 996 |
| 4. | யாப்பிலக்கணம்—மருட்பா | 988 | | | |


அடுத்த ஆண்டுச் சந்தாத்தொகையை நமது சந்தாநண்பர்கள் இப்பொழுதே தயை செய்து மணியார்டரில் அனுப்பிவைப்பார்களாயின் அது எமக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். இம்மாத இறுதிக்குள் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஜனவரி— முதலில் வி. பி. அனுப்புவோம். அதனைக் [redacted]

[redacted] மழுக்கள் பிண்டிபாலம் வார் வில்வாளி [illegible] ழும் இவ்வாண்டில முறறுப் [illegible] இடத்திலிருந்து, "அப்ப ளும் முடிந்தது. முன்விட்ட இடத்திலிருந்து, "அப்ப ரும் அறுபத்து நான்கு கலைகளும்" என்னும் கட்டுரை யை ஸ்ரீமான் தணிகாசல முதலியார் இனித் துவக்கு வார். இவ்வாண்டில் இடையிடையே ஸ்ரீமான் மீனாக்ஷி சுந்தரம் எழுதி வந்த மானதசாத்திரக் கட்டுரைகள் அடுத்த ஆண்டிலுந் தொடர்ந்து முடிவுபெறும். ஸ்ரீமான், நடராஜப் பிள்ளை எழுதுகின்ற 'வில்லிபாரத விளக்கமும்,' ஸ்ரீமான் இராஜகோபாலாசாரியர் எழுது கின்ற "நம்மாழ்வார் வைபவமும்" அடுத்த ஆண்டில் மறுபடி நம் கலாநிலயத்தின் இதழ்களில் தோன்றத் தலைப்படும்.

ஸ்ரீமான் வையாபுரிப்பிள்ளை, புதிதாய்ப் பதிப் பித்து முடித்த "களவியற் காரிகை", அகப்பொருள் இலக்கணத்தின் தெளிவிற்கு மிக்க உதவியாயிருப் பதை நம் வாசகர் பலர் கண்டறிந்துகொண்டிருப்பார் என்பதற் கையமில்லை. அன்னவர் உதவியால் இன்னும் இரண்டொரு புதிய நூல்கள் இவ்விதழ்களில் பதிப் பிக்கப் பெறலாம். ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் உரை யுடன் கூடிய 'சூளாமணி' அடுத்த ஆண்டிலுந் தொட ரும். கம்பராமாயணக் கட்டுரைகளில், முதலிரு ஆண்டுகளில் பாலகாண்டத்தை முடித்த ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர், மற்றிரு ஆண்டுகளில் அயோத்தி யா காண்டத்தை முடித்தார். அடுத்த ஆண்டு முதலி லிருந்து ஆரணிய காண்டம் ஆரம்பமாகும்.

யாப்பிலக்கணத்தில், உறுப்பியலை இவ்வாண்டின் முன்னுறு மாதங்களில் முடித்து, பா, பாவினம் என்

[redacted] நயங்களுக்கு அயலாக [illegible] தெரிந்திருப்ப நீங்கும் என நம்புகின்றோம். ஆங்கிலம் தெரிந்திருப்ப வர்களும், புதுமையும் சுவையும் உடைய சில விடங் களை இக்கட்டுரைகளிற் காணக்கூடும்.

கலாநிலயம் தன்னுடைய தலையங்கங்களில், கடவு ளின் கருணையையும் கலைகளின் பெருமையையும் கலைகளோடு கடவுளை வழிபடு வாழ்க்கையின் விழு மிய செம்மையையும் என்றும்போல் அடுத்த ஆண் டிலும் விளக்கிவரலாகும். ஓதுதலன்றி வேறோர் ஊதி யம் இல்லை உயிர்க்கு—ஈதுணர்ந்தால் யாண்டும் இடும் பையில.

அடுத்த ஆண்டுச் சந்தாவை அனுப்பவேண்டிய நமது நண்பர்கள், எம்மிடத்திலிருந்து நினைப்புக் கடி தங்களும் வி. பி. முதலிய தூண்டுதல்களும் இன்றியே இப்பொழுதே அச் சந்தாக்களை அனுப்பிவைப்பார் களாயின் அவ்வுதவி சாலப் பெரிதாகும். இன்றேல், அடுத்த ஆண்டு முதலிதழை வி. பி. யில் அனுப்பவே ண்டுவது இன்றியமையாத தாகின்றது. மற்று, சிலமா தங்கள் கழித்துத் தமது சந்தாவைச் செலுத்துவது தமக்கு எளிதாயிருக்கும் என்று எண்ணுகின்றவர் அதனை உடனே எமக்குத் தெரிவித்தால், இப்பொழு து வி. பி. அனுப்பாமல் அவர் குறித்த காலம் வரை யில் காத்திருப்போம். மலேயா முதலிய அயல் நாடுக ளுக்குத் தபால் கட்டணம் உயர்ந்துவிட்டபடியால் 1932-வது ஆண்டிலிருந்து வருஷ [illegible] 9-8-0 உள்நாட்டுச் சந்தா ரூ. 7-8-0

தமிழ்நாடு ஆவணக் காப்பக

னைக்கலாநிலயம் அருமையுடன் பாராட்டுகின்றது. எனினும், இவ்வுதவிசெய்த பெருந்தகையாளர்க்கு யாம் என்றுமறவா நன்றிமிகுந்த கடப்பாடுடையவர்களாயிருக்கின்றோம், என்பனபோன்ற மரபுமொழிகளை இங்கு இயம்பிவைக்க மனங்கொண்டிலம். ஏனெனில், எமக்கு உதவிசெய்யவந்த நண்பர்பலரோடு நெருங்கிப் பயிலுஞ் செவ்வி வாய்த்ததால் அவர்தம் உண்மைக் குணத்தின் உயர்வினை உணரலாயினோம். நன்மொழியுபசாரணைகளொன்றும் அவர் எம்மிடம் எதிர்பார்த்தவரலர்; அதன்பொருட்டு அவர் கலாநிலயத்திற்குக் கைதந்தவர்களும் அலர், என்பது தெரியலாயிற்று. தந்தை மகற் காற்றும் உதவிபோல் கலாநிலயத்தை அவையத்து முந்தியிருக்கச் செய்யவேண்டும் என்றொரு கடமையை முன்னிட்டு விவகரித்தவர் அவர் என்பது விளங்கிருக்கின்றதாதலின், நாம் அவர்தமைப் புகழப் புகுவோமெனின் பெரிதும் நாணங் கொண்டவராவார். தன்னைப் பெற என்னோற்றனதோ இத் தமிழுலகம் என்னும் சொல் வழங்கும்படி கலாநிலயமும் செய்துவரும் முயற்சி தளர்வடையாமல் கருணையங் கடவுள் அருள் புரிவாராக.

சந்தாநண்பர்களைச் சேர்த்துதவினோர் கருத்து இதுவெனின், கலாநிலயத்திற்குக் கட்டுரைகள் வரையாது வரைந்தளிக்கின்ற நண்பர்கள்தம் கருத்தின் தூய்மையும் அன்னதே. சிறிதும் உலோபமும் சலிப்புமின்றி வாரந்தோறும் அரியபெரிய விடயங்களைத் தொடர்ந்து வரைகின்ற அவர்தம் ஊக்கமும் அன்பும் அளவிறந் [illegible] ரைகளின் பெருமையும் பயனும் அரு [illegible] கின்ற வாசகர் கலாநிலயத் [illegible] களினும் மிக்கதோர் ஊதியம் [illegible] களுக்கு யாதுளது. [illegible] ந்திரமும், சுவாரத்திரி நாடக [illegible] பெற்றன. 'அன்டனி [illegible]

னும் செய்யுள் பிரிவுகள் இரண்டினில் பாக்களின் இலக்கணத்தைப் பின்னுறு மாதங்களில் முடிக்கலானோம். இனிப் பாவினங்களின் இலக்கணங்களையும், ஒழிபியல் என்னும் பகுதியில் அடங்குகின்ற சில சிறப்பு விடயங்களையும் அடுத்த ஆண்டில் வரைவோம். யாப்பிலக்கணம் அடுத்தஆண்டில் முடிவடையுமாயின் அதன்பின் அணியிலக்கணம் துவக்கப்படும்.

பிறர்உதவியின்றித் தமிழில் இலக்கியங்களைத்தாமே ஓதி இன்புறத்தக்க பயிற்சி அடைவிக்க வல்லதோர் முறையில்யாம் இக்கலாநிலயத்தின்கண் முதல்மூன்று ஆண்டுகளில் எழுதிய தமிழ்ப் பாடங்களை அடுத்த ஆண்டிலிருந்து மறுபடி இவ்விதழ்களில் வெளிப்படுத்துவதற்கு நிச்சயித்துளோம். முதன்முறை வந்தபோது இப்பாடங்களால் மிகப்பலர் பயனடைந்தனர் என்பது எமக்குத் தெரிந்திருக்கின்றது. இவ்வாண்டில் புதுச் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தவர் பலர், இவர்களுக்கும் இனிச் சேர இருப்பவர்களுக்கும் பயன்படுமாறு இத் தமிழ்ப்பாடங்களை மறுபடி வெளிப்படுத்த வேண்டி நேர்கின்றது. முதல் இரண்டாண்டு இதழ்கள் எஞ்சவில்லையாதலின் இதன் அவசியம் பின்னும் அதிகம்.

மேனாட்டுப் பேறிஞர்தம் நூல்களையேனும், அவர் நூல்களின் சிற்சில பாகங்களையேனும் மொழிபெயர்த்து இவ்விதழ்களில் எழுதிவருகின்ற வோர் முறைக்கிணங்க இவ்வாண்டில், ஷெரிடன் இயற்றிய "பிஸாரோ" என்னும் நாடகம் தோன்றியது. அடுத்த ஆண்டில், முன்னர்த் தெரிவித்துள்ளபடி ஷேக்ஸ்பியரின், ஜூலியஸ் ஸீஸர் என்னும் நாடகம் மொழிபெயர்த்தெழுதப்படுவதுடன், ஆங்காங்கே இந்நாடக அமைப்பின் சிறப்புக்களைப் பற்றியும் ஷேக்ஸ்பியரின் புலமையின் பெருமையைப் பற்றியும் விரிவாக வரையப்படும். ஆங்கிலம் கற்றிலாதார் ஷேக்ஸ்பியர் நாடக [illegible]

[illegible] றுநறுதத்தோர்க்கும் இலாபமாம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லை யாதலால் அங்கிருக்கும் நண்பர்கள் இப்பொழுதே தம் வருட சந்தா ரூ. 9-8-0 யை மணியார்டர் செய்தனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"மானேஜர்."

## கலாநிலயம்

### நான்காவதாண்டின் நிறைவு.

ஏக்காரியத்திற்கும் வருட முடிவில் கணக்கெடுத்துப் பார்ப்பதியல்பு. ரூபா அணா பை அளவில் கலாநிலயத்தின் கணக்கை நோக்குவோமெனின், இப்பொழுது முன்னைய ஆண்டினும் அதிகமாய நஷ்டக் கணக்குக் காட்டுகின்றது என்று சொல்லக் கணக்குப் பரிசோதனைப்பட்டம் பெற்றவர் (auditor) ஒருவரும் வேண்டா. இது கஷ்டமான நிலைமையே. ஆயினும், கஷ்டம் என்பதற்கெல்லாம் ஈடுசெய்யச் சுகமும் ஒன்று இல்லாமல் இவ்வையத்தில் தீராது. வருமானவரி வாரிக்கொடுக்க வேண்டாவே என்ற ஒரு மன அமைதியும் அதனால் வரும் உவகையும் எவ்வித நஷ்டத்தையும் ஈடு செய்யவல்லது. ஆயினும் அர்தச் சகம் ஒருபுறமிருக்க, கலாநிலயம் தன்னுடைய நஷ்டக்கணக்கினால் அடைந்துள்ள இலாபம் மிக அருமையானது.

வருவாய்க் குறைவினால் மிகவும் வாட்டமுற்றிருந்த ஒரு கால் "கலாநிலயம்" தன்னுடைய நிலைமையைத் தெரிவித்துக்கொண்டது. அதனைக் கேட்டவர்களிற் பலர் அன்புடன் விரைந்தெழுந்து தம்மாலியன்ற உதவியை அளிக்கத் துவக்கினர். ஆங்காங்குச் சந்தா நண்பர்கள் சேர்த்துத் தருவதன்றி, கலாநிலயம், நன்கொடைப்பொருள் ஆயுள்சந்தா முதலியவைகளை ஏற்பதில்லையாதலின் அதற்கு உதவி செய்ய முன் வந்தவர் மிகவும் வருந்தினர். எனினும் அன்னவர் தம் முயற்சியின் மிகுதியால், இவ்வாண்டின் இடையில் புதிய சில சந்தா நண்பர்கள் சேர்ந்து கலாநிலயம் மேன்மேலும் வாட்டமடைந்து போகாமல் தடுக்கலாயிற்று. அது முதல் சந்தா நண்பர்கள் மெல்ல மெல்ல சேர்ந்துகொண்டு வருகின்றனர். கலாநிலயம் நின்றுவிட நேருமோ என்ற அச்சம் ஒருவாறு தீர்ந்ததென்னலாம். அடுத்த ஆண்டில், கவற்சியினும் நம்பிக்கையே அதிகமாக எய்தப்பெற்றுக் கலாநிலயம் கடவுளருளை முன்வைத்து நிகழலாகும். இவ்வண்ணம் யாம் இயம்பும்படி உதவிபுரிந்தவர்தம் கருதரிய நட்பி



# கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[972-வது பக்கத் தொடர்ச்சி]

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்றதற்கேற்பச் சான்றோர்பலருக்கு உறைவிடமாகிய தொண்டைமண்டலத்தைச் சார்ந்த சென்னையம்பதியிலே இற்றைக்குச் சற்றேறக்குறைய நூற்றைம்பதாண்டுகட்குமுன்ன ரிருந்து, விநாயகபுராணம் பாடியவரும், பல புராணங்கள் தோத்திரங்கள் உலா ஆற்றுப்படை தூது முதலியன செய்தவரும், சைவ வேளாளக் குரிசிலும், திருத்தணிகை வாசியும், திராவிடமாபாடிய கர்த்தருமாகிய மாதவச் சிவஞான சுவாமிகளது முதன் மாணவரும், மகா வித்வகுலதிலகருமாகிய ஸ்ரீமத் கச்சியப்ப முனிவரென்பார், தாம் இயற்றியுள்ள விநாயகபுராணத்து மதிற்பொறிகளின் வகைகளை வனப்புறவகைந்து மொழிந்துள்ளாராகலின் அவரது கவிகளையும் ஈண்டுக் குறிக்கின்றோம். அவைகளாவன:—

நொச்சியுச்சி வேய்ந்து நீண்ட நொச்சியோடு போர்செய
இச்சையுற்ற மன்னர்வந் தெதிர்க்கும் வண்ண [முண்டெனின்
நச்சுமிழ்ந கர்க்கண் வாழும் நல்லவீரர் வேண்டுமோ
மெச்ச வெந்தி ரங்களே விரைந்துபோர் விளைக்குமே.

வந்துமன்னர் நொச்சிமுற்றின் வார்ந்த கண்டமோச்
எந்திரக் கடாக்களிற் றினங்கதிர்த்த தோடுடன் [சியே
முந்தவோடி மாமடங்கன் முற்றுமேலெழ மட்டெடும்
குந்தமன்னர் வாம்பரிக் குலந்தவட்டும் வேங்கையே.

எழுக்கள்கப் பணங்கள்வேலி ருப்புலக்கை நாந்தகம்
கழுக்கடைக் குலங்குயங்க கைக்குலங் கலப்பைகள்
மழுக்கள் பிண்டிபாலம் வார்வில்வாளி [illegible]
[illegible]
[illegible]ருப்பு நன்று வந்தமன்னர் சேனைமே லுருக்கிய
இருப்புநீர்கள் செப்புநீர்கள் ஈயமோ டிறைப்பன
நெருப்பினோடு கல்லுலோக நீளிடைச் செலுத்துவ
உருப்பமிக்க யாவுமங்கு லப்பிலாத மல்குமே.

(விநாயகபுராணம், திருநகரப்படலம், செய்யுள், (62-65.)

என்பனவேயாம்.

உடல்படைத் தியக்கலோர் நிமித்த னுண்டெனக் [கொளத்
திடம்வலித்த சான்றதா யவனர்தாட் செயப்படுந் [பகை
தொடர்புடைப் பொறிக்குலஞ் சுழன்றெழும் விழும்
நிடல்கெடத் தெழிக்குமோடு மீளுமின்ன நீரவே.

எனக் காஞ்சிப்புராணத்து மாதவச் சிவஞானமுனிவர் ஓரே கவியில் இவ்விடயத்தை யழகுறக் கிளந்துளார்.

சூரபன்மனது கொடுமைக்கஞ்சித் தேவேந்திரன் தன் மனைவியுடன் சீகாழி சென்று கரந்துறையுங்கால், தன் சிறியதந்தையாகிய உபேந்திர மூர்த்தியின்வைகுந்தலோகஞ் சென்றிருந்து மீண்டவனாகிய இந்திர குமாரன் சயந்தனென்பான் பெற்றோரிலாமையை நினைந்து நினைந்து கவலைக்கடலுள் மூழ்குவா னாயினன். அதுகாலை, நாரதர் ஆண்டுப் போதர அவனவரைத் தூய வாதனத் திருத்தி யுபசரித்துப் பின் தன் குறைகளைக் கூறவே முனிவரர் அவனுள்ளந் தேறுமாறு அடியில் வரும் உபதேச மொழிகளைப் புகட்டுவா ராயினார். அச்செய்யுட்களை யுரையுடன் வரைந்து அவற்றின் கருத்தொத்த சங்கநூற்பகுதிகளையு மினிக் குறிக்கத் தொடங்குவாம். அக்கவிகளாவன:—

தீங்குவந் தடையுமாறும் நன்மைதான் சேருமாறுந்
தாங்கள்செய் வினையினாலே தத்தமக் காயவல்லால்
ஆங்கவை பிறரால் வாரா வமுதநஞ் சிரண்டினுக்கு
மோங்கிய சுவையின்பேத முதவினர் சிலருமுண்டோ.

இன்பம்வந் தடைந்த காலை
யினிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம்வந் துற்ற போதுந்
துன்னெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந் தானு
மிவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார்
முழுவது முணர்ந்த நீரார்.

வறியவர் செல்வ ராவர்
செல்வர்பின் வறிய ராவர்
சிறியவ ருயர்ந்தோ ராவர்
உயர்ந்துளோர் சிறிய ராவர்
முறைமுறை நிகழு மீது
முன்னையூழ் வினையே கண்டாய்
எறிகதிர் வழங்கு ஞாலத்
தியற்கையு மினைய தன்றே.

ஆக்கமும் வறுமை தானும்
அல்லலு மகிழ்வு மெல்லாம்
நீக்கமி லுயிர்கட் கென்று
[illegible]
வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளு
முறைமுறை பொருந்திற் றன்றே.

என்பனவேயாம்.

(தீமை வந்து சேர்தலும் நன்மை வந்து சேர்தலும் தாங்கள் முன்பு செய்துள்ள தீவினைநல்வினைகளால் (முறையே) அவரவர்க்கு ஆவனவல்லாமல், கீழ்க் கூறப்பட்ட அவை பிறரால் வரமாட்டா; அமுதம் விஷம் இரண்டிற்கும் பொருந்திய ருசிபேதம் இயல்பாக அமைந்ததேயல்லாமல் அதனைக் கொடுத்தவர் வேறு சிலரும் உண்டோ?)

(எல்லாவற்றையும் அறிந்த தன்மையை யுடையவரான பெரியோர் (தமக்கு) இன்பம் நேர்ந்தபொழுது இனிமையுடையதென்று களிப்படையடையார்; (தமக்குத்) துன்பம் நேர்ந்தபொழுதும் அஞ்சித்திடுக்கிட்டு நடுங்கித்தளரார்; இன்பமும் துன்பமும் இந்த உடம்புக்கு இயல்பாக அமைந்தன என்று எண்ணியே (அவற்றிற்குத் தக்க காரணமாய்) முன்னேமேயே பொருந்தியுள்ள வினைத்தொடர்ச்சியை ஆராய்வார்)

(ஒருகாலத்தில்) வறுமையை யுடையோர் (மற்றொரு காலத்தில்) செல்வமுடையவராவர்; செல்வமுடையவர் பின்பு வறுமையையுடையவ ராவர்; தாழ்ந்துள்ளவர் உயர்ந்தவராவர்; உயர்ந்துள்ளவர் தாழ்ந்தவராவர்; மாறி மாறி நடக்கின்ற இத்திறம் பழமையான இருவினைப் பயனேயாம்; வீசுகின்ற கிரணங்

களையுடைய சூரிய சந்திரர் சஞ்சரிக்கின்ற உலகத்தின் இயல்பும் இத்தன்மையன்றோ ?)

(செல்வமும், வறுமையும், துக்கமும், சுகமும் ஆகிய இவையனைத்தும் (உலகில்) நீங்குதலில்லாத பிராணிகட்கு எந்நாளும் நிலையாகவுள்ளன என்று கொள்ளுதல் தகுதியுடையதோ? (அன்று என்றபடி). மேலே உயர எழுந்து விளங்குகிற தெய்வத்தன்மையுள்ள சந்திரனது வெண்மையான நிலாவைப் பரப்புகின்ற கலைகளின் தொகுதி குறைதலையும் வளர்தலையும் எந்நாளிலும் மாறிமாறிப் பொருந்தியதன்றோ?)

இவை, செய்யுட்களின் பொழிப்புரை. மேலே குறித்த கவிகளின் கருத்தை யொட்டிய சங்கநூற் பாக்களை யினிக் குறிப்பிடுவாம்.

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

(புறம் - 192.)

திணை—பொதுவியல்
துறை—பொருண்மொழிக் காஞ்சி

பொதுவியற் றிணையாவது—மற்றைப் புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாயுள்ளனவும், அவற்றுட் கூறுதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைக்கூறுவது)

(பொருண்மொழிக் காஞ்சியாவது — முனிவரும் அவரைப் போன்றவரும் 'உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதியைத் தருவது இன்னதுஎன்று தெளிவாயறிந்த பொருளைச் சொல்லுவது.)

இச்செய்யுளைப் பாடியவர் கணியன் பூங்குன்றன் என்னும் புலவர். பெயரின் போக்கால் இவர்பூங்குன்றம் என்ற ஊரில் வசித்தவரென்பதும், சோதிடஞ் சொல்வோரென்பதும் விளங்குகின்றன. கணிபுன் குன்றனரெனவும் இவர் வழங்கப்படுவாரெனச் சிலர் நுவல்கின்றனர். இவர் ஊழ்வினையின் தன்மையையும் உலகத்தியல்பையும் உள்ளவாறே யுணர்ந்த தத்துவ ஞானியென்பது இவரது பாடலால் விளங்கும்.

கெடுதியும் நன்மையும் (தாமேவரினல்லது) பிறர் கொடுத்தலால் உண்டாகாவாம்; நோயும் அது தீர்தலும் அந்தத் தீது நன்மைகளையே ஒரு தன்மையாக ஒப்பன. இறப்பும் புதிதாகத்தோன்றுவதன்று (கருவிலிருந்து பிறந்தபொழுதே தொடங்கி யுறுதியாக ஏற்பட்டுள்ளது) (இங்ஙனம் தீது முதலிய யாவும் முன்னர்த் தொடங்கி அமைந்திருத்தலால்) வாழ்வதை இனியதென்று மகிழ்ந்திருத்தலையும் உடையோமல்லோம்; வெறுக்கத்தக்க தொன்று நேர்ந்தபோது (அதனை) இன்னாததென்று வருந்துதலையும் உடையோ மல்லோம்; மின்னலுடனே மழை, குளிர்ந்த மழைத்துளியைப் பெய்வதனால் அடங்காமல் கற்களையலைத்து ஒலிக்கின்ற வளப்பமுள்ள பெரு நதியின் பெருக்கு நீர் (செல்லுகின்ற) வழியாகவே செல்லுகின்ற தெப்பம்போல் அரியஉயிர் ஊழின் வழியாகவே செல்லும் என்ற விஷயம் (நன்மை தீமைகளின்) கூறுபாட்டை யறிந்த பெரியோர் கூறியுள்ள நல்லறிவையுண்டாக்குகின்ற நூலாலே தெளிவாக அறிந்துள்ளோம்; ஆகையால் நன்மையால் மிக்கிருக்கின்றவர்களைப் பாராட்டுவதும் உடையோமல்லோம்; (நன்மையற்றிருக்கின்ற) கீழோரைப் பழித்தல் அம்மதித்தலைக்காட்டிலும் உடையோமல்லோம், (ஆகவே) (எமக்கு) எல்லாம் ஊர்தான்; எல்லாரும் சுற்றத்தார்தாம்) பெருமைக்கும் எனைச் சிறுமைக்குந் தத்தம் வினையே கட்டளைக்கல். 'பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே' என்பன ஈங்கு ஒப்புநோக்கத்தக்கன.

பெரியோரை வியவாமல் இருந்தாலும் இருக்கலாமாயினும், சிறியோரைக் கண்டால் சிறிதாவது இகழ்தல் நிகழக்கூடுமாதலால், அவ்வாறு சிறிதும் இகழோம் என்பதை வற்புறுத்துதற்குச் 'சிறியோரை இகழ்தல் அதனினும் இலம்' என்றார்.

இனிச் சிந்தாமணிக் கவியை நோக்குவோம்.

சாதலும் பிறத்த றானும்
தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லா
மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம்
நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய்
பெய்வளைத் தோளி யென்றான்

கட்டியங்காரனென்னும் தீய வமைச்சன் கொல்லுதற்பொருட்டு அந்தப்புரத்திருந்த சச்சந்தமன்னனை வளைந்துகொள்ளுதலைக் கேட்ட விசயை யென்பாள் மிகவும் வருந்த அவளை நோக்கி மன்னவன் தேற்றுதற்பொருட்டுக் கூறிய பாசுரங்களுள் இஃதொன்றாம்.

(பேதாய் ! தோளி ! சாதல்தானும், பிறத்தல்தானும், ஆதல்தானும் அழிதல்தானும் எல்லாம் தம் வினைகளின் பயத்தானுண்டாம்; ஆண்டுச் சாதற்கும் அழிதற்கும் நோதலும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவின்மையன்றே ? நீ இங்ஙனமாதலிற் பெரிதும் அறிவிலியாயிருந்தாய் ; அவ்வினையுறுதல் பொருட்கு இயல்புகாண் என்றானென்க)

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்'

'இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்'

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
துன்ப முறுதலிலன்' (குறள்-இடுக்கணழியாமை)

என்றவை யீண்டுக் காணத்தக்கன.

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்.

என்ற சிலப்பதிகாரம் இங்குக் கருதற்பாலது.

'தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து

(புறநானூறு)

(வளர்ந்தொன்று பின்பு) குறைதலுண்டாதலும், (குறைந்தொன்று பின்பு) வளர்தலுண்டாதலும், (பிறந்தொன்று பின்பு) இறத்தலுண்டாதலும், (இறந்தொன்று பின்பு) பிறத்தலுண்டாதலும்,



(என்ற இவற்றை) (கல்வியினால்) அறிந்துகொள்ளமாட்டாத மடமையை யுடையவர்க்கும் (தன் செய்கையால்) அறியும்படி செய்து, சந்திரனாகிய தெய்வம் இயங்குகின்ற உலகத்து)—பழைய உரை.

இக்கருத்தொத்த சிந்தாமணிக்கவியைக் காண்பாம்.

மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும்
தேய்தலும் உடைமையைத் திங்கள் செப்புமால்
வாய்புகப் பெய்யினும் வழுக்கி னல்லறம்
காய்வது கலதிமைப் பால தாகுமே

(சிந்தாமணி—முத்தியிலம்பகம், செய் - 334.)

(ஜீவகன் துறவு மேற்கொண்டகாலை தன் இல்லக் கிழத்தியரை வரவழைத்து அவர்களுக்கு நீதிகளையும் அறத்தின் பகுதிகளையும் உபதேசித்த சந்தர்ப்பத்தில் இது வந்துளது)

(திங்கள், சாதலும், பிறத்தலும், தேய்தலும், பெருகலும் யாக்கைக்கு உடைமையாதலை அறியாதோரையும் அறியக்காட்டிச் செப்பாநிற்கும்; அதனைக் கண்டும், நல்லறத்தைச் செவிக்குள்ளே செல்லும்படி சொரியினும், அதனைக் கேட்டும் மனங் கொள்ளாதே அவற்றைக் கைவிடுவது தீவினையின் கூறும் என்றானென்க) என்பது, நச்சினார்க்கினியரதுரை. இங்குக் குறிக்கப்பட்ட சங்கச் செய்யுட்களெல்லாம் மேலே குறிக்கப்பட்ட கந்தபுராணக் கவிகளின் கருத்துக்களை யுட்கொண்டிருத்தல் காண்க. இனிப் பிறப்புக்களின் தன்மையைச் சூரியதேவன்மேல் வைத்துக் கம்பர்விளக்கிய பான்மையைக் கவனிப்பாம்.

சூரியோதயவருணனை.

துறக்கமே முதலவாய தூயன யாவையேனு
மறக்குமா நினையலம்மா வரம்பில தோற்றமாக்க
ளிறக்குமா றிதுவென்பான்போல் முன்னைநா ளிறந்
[தான் பின்னாட்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன்
[பிறவர் வெய்யோன்

அயோத்தியாகாண்டம், கங்கைப் படலம் 55.

[பிறவா வெய்யோன்'] (உலகத்தார்போலப் பிறத்தலென்பது இல்லாதவனான சூரியன், சுவர்க்கம் முதலாக உள்ள (நகரத்தைக் காட்டிலும்) தூயனவாகத் தோன்றுகின்ற உலகங்களையும் மறந்துவிடும்படி (பிறப்பிறப்புக்களில்லாத மோட்சத்தையடையுமாறு அந்தச் சிறந்த அளவிறந்த பிறவியிற் பிறக்கின்ற மானிடர்கள் யாவரும் நினைத்து ஈடேறும் வழியை) நாடக்கடவர் ; (ஏனெனில்) (அன்னார்) இறந்துவிடுகின்ற வகை இதுவாகும் என்று(உலகத்துமாந்தர்க்குப் போதிப்பவன்போல முன்நாளில் அஸ்தமித்தவனாய், மறுநாள் பிறக்கும் வகை இவ்வாறு என்று கூறுபவன்போல உதயமானான்.)

[உலகத்தில் மிக்க செல்வம் அறிவு முதலியவற்றால் மிக மேம்பட்டவர்க்கும் திடீரென்று இறப்பு பிறப்புக்கள் அஸ்தமன உதயங்கள் போல மாறி மாறி வருந் தன்மையனவாதலால் பிறப்பிறப்புக்களுக்கு இடனான துறக்கம் முதலிய உலகங்களையும் நாடாது என்றும் மீளா உலகமாகிய முத்தியைச் சேருமாறு முயல்க என்னும் அறிவை உலகத்தோர்க்கு உண்டாக்குபவன் போலத் தனது ஆயிரங்கிரணங்களும் சுருங்கும்படி அஸ்தமித்துச் சூரியன் உதிக்கலாயினன் என்பதாம். தன்னுடைய செய்கையால் பிறர்க்கு நன்மையையேனும் தீமையையேனும் போதிப்பதாகக் கூறுவது காட்சியணியின்பாற் படுமென்பது ஒருசார் அணிநூலார் கொள்கை.]

# நவராத்திரி

## [ஓர் நாடகம்]

[970-வது பக்கத் தொடர்ச்சி]

சுப :—நானா ? அவளா ? ஏமாற்ற மென்ன ? கைகூடி விட்டதே பயன். இவ் ஆடை அவளை மயக்கியே விட்டது. இன்னும் சற்றுநேரம் அதனைப் புனைந்துழக்க அனுமதி இருப்பின்—இதோ, உடுத்தினேரொடு அளாவிக் குலாவி, மனத்தொடு மனம் அவள் இணங்கியதும்—சிறு நேரத்திலேயே—முகச்சாயலே கண்களை ஈர்த்துப் பின் எந்நாளும் என் அன்படிமை ஆகிவிடாளா குஞ்சு ?

தியா :—சரி— அவ்வாறே ஆகுக, வெற்றி. அணிந்திரு.

துரை :—கிழவியோ கோவியாள்.

தியா :—அவளது ஆவி அலறுமே !

சுப :—உமக்கு மனமில்லை, என்றுஉணர்ந்தேன்—எனக்குமட்டும் மோகமோ ?—இதோ—அவிழ்த் தெறிகிறேன் (நகைகளைச் கழற்றத் தொடங்குகிறாள்).

தியா :—அதற்குள் இக்கடிதத்தைப் படிக்கிறேன் (விளக்கருகு செல்ல)

சுப :—வேண்டாம் (பிடுங்குகிறாள்)

தியா :—என் பெயருக்கு வந்தது இது—பிடுங்க உரிமையில்லை உனக்கு. (அவள் சுற்றிச் சுற்றி ஓட, தொடர்ந்தோடுகிறான்)

சுப :—என் கைகளைப் பிடித்திழுத்து—கையைப் பிய்த் தெறிகிறீரே !

துரை :—நீ அதனைக் கேட்பதில் பயனில்லை, தியாகரே.

தியா :—சரி—விட்டுவிட்டேன் பிடியை, மன்னிக்கவும்.

சுப :—கோபமா ?

தியா:—என்மீதே எனக்குக் கோபமும்வெட்கமும்.

சுப :—(பெயர் படிப்பதுபோல் பார்த்து,சிரித்து)உம் பெயரே—மேல் காண்கிறது....

தியா :—இருட்டில் எப்படிப் படிக்கமுடியும் நீ—

சுப :—என் கண்ணுக்குத் தெரிந்தது—இதோ—உம் கடிதம் உம்மிடமே தந்துவிடுகிறேன்—காதலி யாரோ விடுத்ததுபோலும் — வீம்பும் விடாமையுமாய் விலக்குறீர்.

தியா:—வேண்டாம்—நான் பார்க்கமாட்டேன், எடுத்துக்கொள்.

சுப:—உமது—பார்க்க மனமின்றேல்,கிழித்தெறிக.

தியா:—நீ எழுதியதாயின்—உன் மனமின்றிப் பார்ப்பதா நான்? மாட்டேன், இந்தா ?

துரை:—அனுமதி தரினும் பார்க்கவே வேண்டுவதில்லை—பித்தரோ, நீர் தியாகரே! எழுதினவள் காதலிஎன்கிறாள்—தானே என்கிறாள்,பின்னர் என்ன எழுதியிருப்பாள்?

சுப:—பிரித்துப் பார்க்கட்டுமே! (நகைக்கிறாள்)

தியா:—அப்படியே (பிரித்துப் படிக்கிறான்)

சுப:—அதற்குள் நகைகளை அவிழ்த்து வைத்து விட்டு வருகிறேன்.

துரை:—யாரிடம் கொடுக்க? உன் மேனியே தக்க பொக்கிஷப் பெட்டி தற்போது-ஆங்காங்குக் குலுங்கி இலங்கட்டும்!

சுப:—இப்பொழுது புகழ்கின்றீர்—அப்பொழுது இகழ்ந்தீர்—பேராசைக்காரி யல்லவா நான்? ஏன் ஆதிமூலம், என்னைத்தான் தாய் சுதந்தாதேவி என்றெண்ணுகிறாள்? என் போன்ற ஏழையர்க்குச் செல்வம் வேண்டுவதில்லை. இன்பம் எய்தப் பட்டாடையும் அணிகலன்களும் பெற்றதாக எண்ணி இறுமாத்தலே போதும்—எனதல்ல இவை எனினும் கைக்கு எய்தியது—சுதந்தர தேவியானேன் - குஞ்சு நோய் தீர்ந்தது—அன்னை என்கிறாள் என்னை. ஆடை அணிந்ததால் உண்டானதன்று இக்களிப்புஎனக்கு—பிறர் எய்திய நற்பயன்கண்டே !

தியா :—மெய்யே - முப்பத்து முக்கோடி அமரராம் இந்திய நாட்டு நம் மக்களனைவரையும் கோடீசுவராக்கஇயலுமா சுயராஜ்யம்? "பெருஞ்செல்வர் யாம்" என்றேமாக்கும் மனத்த ஏழையோரும்; இந் "நகைகளால் யாம் கண்டன யாவோ?" என்றெள்ளி நீக்கும் மனத்த மாட மாளிகையோரும் நனிமலி நளிர் நாடே தன்னரசுத் தற்கோல்நாடு! நீநேரிதே ஒழுகினாய் குஞ்சு திறத்திலே. மெச்சுகிறேன் உன்னை. கடிதம் இதனைக் கண்டபின் நல்கலாம் நீ இவ்வுரிமையை எனத் துணிகிறேன். நான் கைநீட்ட உன் கையைக் கோடு.

சுப:-(சிரித்துக் கொண்டு) என் மோதிரமல்ல இவை! எனக்கு மோதிரமே கிடையாது.

தியா :—நான்மட்டும் அணிகிறேனா ?

துரை :—குஞ்சு, ராஜீயா, மாயாண்டி—எல்லோரும் வருக இங்கே—வேடிக்கை.

சுப :—(தலை குனிந்த வண்ணமே) பொம்மைக் கலியாணம்-பொய்ம்மைக் கலியாணம்,வேடிக்கைக் கலியாணம்—இதுவும் பொம்மை மணமோ ?

தியா :—எப்போ கலியாணம் ?

ராஜீ :—நீங்கள் வாங்கோ இங்கே வேடிக்கைகாண—அங்கென்னவேடிக்கை — ஆகா — என்னென்ன பொம்மைகள்—இது திலகர் மாதிரியிருக்கே.

துரை :—(இருவர் தம் ஆடைத் தலைப்புக்களையும் முடி போட்டு) கிறிஸ்துவர் திருமணம்போல் சாமியார்நின்று நடத்திவிட்டார் உங்களுக்கு (சிரிக்கிறான்)

தியா:—தலைநிமிர்ந்து பார்க்கக்கூடாதா சுபத்திரை! ஏன் ? நாணம்? (அருகுற்று முகத்தை மெல்ல உயர்த்த)

சுப :—சவங்களிதோ கிடக்கையில்—நாமிருவருமிங்கே...இங்ஙனம் (சிரிக்கிறான்)

தியா:—ஆம்—போவோம்—முதலில் நம் குழந்தை இவளைக் கொலுஅறையில் கொண்டுபோய் வைக்கின்றேன்—வேளை வந்துவிட்டது.

சுப :—தந்தம்—கனக்குமே-நானும் பிடிக்கிறேன்-

[இருவரும் தூக்கிக்கொண்டு மெள்ளக் கொலுஅறை செல்கின்றனர்]

துரை :—நான் விளக்குக் காட்டுகிறேன்—நானும் பிடிக்கணுமோ ?

குஞ் :—நம்ம வீட்டில் இதுமாதிரி கிடையாவே—எங்கிருந்து வந்தன இவை !

ராஜீ :—இது முகமதலிதான் நிச்சயம் — அது ஜின்னா. அது அன்சாரி—இது யாரோ ரசூலோ ஹசனோ ? அக்பரோ, ஜீகாங்கீரோ ?

சுப :—என்ன பிரசங்கமிங்கே—நம் நாட்டு மணிகளை ஒலித்துக்கொண்டு ?

மாயா :—எனக்குக் காட்டி விளக்குகிறாள், இந்தப் பொம்மைகளை.

தியா :—ஓகோ—அந்தப் பெட்டிகளைத் திறந்தீர்களா—அவர்களைப் பெட்டியில் பூட்டிவைத்தேன், சுதந்திரம் அளித்தாயோ குஞ்சு ?

குஞ் :—நான் திறக்கவில்லையே — படங்களால்—என்னைப்போல அங்கிருக்கே—இங்கும் சிலைகளே !

ராஜீ :—பார் — ஆங்காங்கு, என்ன அழகாய்க் கொலுஇருக்கின்றனர்.

துரை: —முன் நான் பார்க்கவில்லையே (பிரமித்து நிற்கிறான்) அற்புதம்! விந்தையே விந்தை! அட, புதுமையே!

சுப :— என்ன புதுமைகள், பதுமைகள், பார்ப்போம்—சிறிது கீழே வைப்போமா ?

தியா :—(இந்நியை சிலையைக் கீழ் நிறுத்துகையில்) இன்னும் என்ன மாயங்கள் ?

மாயா :—இது யார் காந்தியா ? அல்ல, தேசபந்துதான், முன்னர்ப் பார்த்திருக்கிறேன்.

குஞ்சு :—இவள் யார் ?

தியா :—எது—இது பெசண்டு, அது சரோஜினி-அது தோரு.

சுப :—அது நேரு—இது மேதா—இங்கே தாதாபாய்.

தியா :—எல்லோரும் குழுமியிருக்கின்றனர். சுப்பிரமணி அங்கே! அது கஸ்தூரி, கருணாகரர், முத்துசாமி, பாரதி-அரவிந்தர்-இதோ வரதராஜுலு-இருக்கும் நிலைகளினின்று கலைக்கவேண்டாம். நான் இன்று குஞ்சுக்குப் பரிசளிக்கக் கொணர்ந்த மூன்று பெட்டிகளி லடைத்துவைத்த பொம்மைப் படங்கள் சிறிதும் பெரிதும் அனைத்தும் சிலைகளாகிப் பொங்கி வீறியுளவே—நாம் அனைவோரும் தொழற்கென.

சுப :—நாம் தற்செயலே நிறுத்திய இடத்தில் திரு இந்தியை பொலிவது அரசவையிலே கொலு வீறுவது போன்றே—அழகு திகழக்கவில்லையா ?

தியா :-இறந்தோரும் இருப்போரும்—நாட்டிற்கே உழைத்தோரும்உயிரீந்தோரும்-அநேகர், பேபர், அவுரங்கசீப்பும்கூட எங்கோ இருப்பர். சென்று நம் நாட்டுக்குப் புகழ் உலகிடை உலாவிடச்செய்த வள்ளுவர், கம்பர், தாகூர், ராமன், ஜகதீசரும் இருப்பர்-பின்னர்த் தேடுவோம்.



குஞ்:—இப்பொழுதுதான் நம் வீட்டில் கொலு பொலிவொடு பூத்துளது—ஊராரை மஞ்சள்குங்குமத்திற்கு அழைத்துவரப்போகிறேன்.

தியா:—எவ் ஊரில், எவ் நாட்டில், எவ் வீட்டில் இதுபோல, இனிக் கொலுவும், கோலும் குழுமிக் கொழிக்கக் கொண்டாடுவர்? உன் தந்தை, இராஜாவிடம் சொல்லி இதனைச் சக்தி ஆசிரமாக்கி விடுகிறேன். வான் தெளிந்து விண்மீன் சுடர்வனகாண். இன்றுபோ லிரவு முன் என்றும் கண்டிலேன், முத்துப் பந்தல்வேய்ந்தென, வெள்ளை மாலைகள் வீக்கிய போல்—பார் — நவராத்திரியல்லவா இன்று—ஆம் புத்திரவே! குஞ்சு; இதுகாறும் நீ இராப்பொழுதில் அஞ்சி நடுங்கி ஒடுங்கினாப்போல் இனிப் பூதத்திற்கும் பேய்க்கும் பயப்பட வேண்டாம்—புது ராத்திரியே இன்று முதல்...நாளை முதல்—பகலிலும் தீக்குச்சி ஏற்றும் அவல நிலை வாராது !

துரை :—ஆமாம் குஞ்சு—போய் அழைத்துவா—உலகோரை. மணாளரையும் வைத்து மங்களம் பாடுவோம்.

சுப :—சிச்சீ—பொம்மைகளா நாங்கள் ? (தாரஒடு கையில்)

தியா :—யார், என் சோமனை இழுப்பது. நீயா ? (சிரிக்கிறான்)

சுப :—(சிரிப்பு அடக்கமுடியாமல்)ஐயையோ—நீங்களன்றோ இழுக்கிறீர்கள் என் புடவையை ?

குஞ் :—ஏன் சிரிக்கிறீர்கள்—எனக்குச் சொல்லக் கூடாதா—நான் அழுவேன்.

மாயா :—கணவன் மனைவியா நீவிர்—அப்படிச் சொல்லுங்கள்—எனக்குத் தெரியாதே ?

ராஜீ :—இதற்குத்தான் [redacted] ளை. பராசக்தி நம்மை இயக்கியும், அந்தச் சக்தியம்மையின் முழு அருளின்றி இந்தியர் நாம் பாவைகளாகவே—பாவை எனப் பெண்பாலரைக் குறிக்கவில்லை, ஏசவில்லை நான்......சீறுதே. சுபத்திரை—மரப்பாச்சிகளாகவே மயங்கிக் கிடந்தோம். இன்றே சித்திரப் படங்கள்—நெடுக்கும் குறுக்குமே ஆகிய ஈரளவையிலே இயன்றன-உப்பிப் பொங்கித் திரண்டு சிலை யுருவின் மூன்றளவைப் பிழம்பாகி எங்ஙனம் பூத்தனவோ—அங்ஙனே, சிலையுருவேம்—வன்மையும் ஆற்றலும் வீறிட்டெழ ஆன்மவாழ்வில் ஓங்கித் திளைப்போம்—பாவம் உருமபிள்ளை அவனது திருட்டுத் துணிகளை நான் எரித்தபோது.........

ராஜீ :—நீயா, எரித்தாய் ? தானே என்று ஓவ்வினானே.

மாயா :—காந்தியல்ல—பொய்யா அது ?

குஞ் :—நீ தானே காந்தி—அப்பொழுதேஊகித்துவிட்டேனே.

சுப :—புடவைகளை எப்போது எரித்தீர் ?

துரை :—அவை வேறு. ஆம், நானும் அதில் கலந்தவனே. கடியாரங்கள், மோதிரங்கள், பொற்காப்புகள், பொன்மாலைகள், ஒரு ஒட்டியாணம் கூட—வைரபேசர்—இவைகளைத் திலகர்நிதிக்காகக் காந்தியார் பிரசங்கம் செய்த கூட்டத்தில் நாட்டுப் பற்று வெளியில் குழுமியோரனைவரும் காணிக்கைகளாக வழங்கி வீசின காலை—நாணயத்தார், நம்பகத்தார் நல்லார் என்று எம் மிடம் வந்து குவிந்தன எம்கைகளில். ஏமாற்றி அடித்தோடினான் இந்தஉருமபிள்ளை—கேட்டீரா இழைத்த துரோகத்தை.

தியா :—(பிரமித்து) வீடுவீடாய்த் திரட்டிய அன்னியத் துணிகளைத்தான் எரிக்காது வஞ்சித்தான் என்றெண்ணினேன். நாட்டுமங்கையர் நகை நலங்களையும் விழுங்கினானா ? வேண்டாம் சென்றன செல்க ! இறந்தோன்தன் இழிசெயற் கட லாடவேண்டாம். நான் அத்துணிகளை இன்று ஈமஓமம் வளர்த்தபோது "இப்பொழுது அவனணிகிற ஆடைகளையோ' என்று வருந்தி, அவாவினேன் அவைகளையும்; என் கையாலேயே அவைகளையும் தீக்கிட—இவனது சவத்தை யானே எரியூட்டுவேன்.

சுப :—பின் யாருளர் ? பாட்டிக்கும் தாங்களே ஈமக்கடனிறுக்கணும், மகன் ஊரிலில்லாததால். நேரமாகிறதே.

குஞ் :—ஆப், நேரமாகிறது. மாலையிலே அழைத்துவிடுவர் கொலுவுக்கழைக்க. நம்வீட்டிலோ இப்பொழுதே கொலு வைத்திருக்கிறது. நீ புடவை புதியன உடுத்தியிருக்கிறாய். தயாராய் நானிப்படியேதான் போகப் போகிறேன். குங்குமச் சிமிழில்லாவிடின் என்ன ?

ராஜீ:—நான் போய்த் துலுக்க வீடுகளை அழைத்து வரட்டுமா ?

மாயா :—நான் போய்—கவண்டர், பள்ளர், பறையர், [redacted] வேற்றுமை பாரோம்—யாவரும் வரவேண்டும். வெள்ளைக்காரரையும் நாம் அழைத்தேக வேண்டும். வெள்ளைக்காரரையும் நாம் அழைத்தே ஆகணும்—அன்னாரே முக்கியமாய்ப் பார்க்கணும் நாட்டம்மனின் சக்தியை. யாரழைப்பர் போய் ?

தியா :—ஆங்கிலம் தெரிந்தவனே என்று என்னை ஏவுகிறாயா ? சாமியார் யாரை அழைத்து வருவார்—பொய்ச் சாமியாரல்லவா-உமது மெய்ப்பெயர் என்ன, அதனால் இனி உம்மை அழைப்போம்.

துரை:—பெயர் துரைஎன்று என்னை அனுப்புகிறீர்களோ வெள்ளையரைக் கொணர (சிரித்துக்கொண்டு) நான் என்ன செய்தேன் என்னை இந்தியதேவி பகைகொண்டு எதிர்த்திட ? சிம்மன் என்னும் என் பெயரில் வாலோ பிடரியோ ஆடுவதாலோ? கதர் தானே நான் இதோ அணிந்திருப்பது—இந்தியைதன் நலம் மறந்திலனே!

சுப :—உமது பெயர் என்ன ? துரையா?, சிம்மனா சிம்ம துரையா ?

தியா :—ஏதேனுமாகுக-பெரும் பாரதம் அக்கதை-பின்னர்க் கேட்போம்.

திரை

நவராத்திரி — முற்றிற்று.

# யாப்பிலக்கணம்

## செய்யுள்—மருட்பா.

[937-வது பக்கத் தொடர்ச்சி]

ஆசிரியப்பா வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் நான்கு பாககளின் இலக்கணங்களைக் கற்றோம். இப்பா ஒவ்வொன்றும் தனித்தனி இலக்கணத்திற்கு இணங்கி நடக்கும். இனி, வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்து நடக்கக்கூடிய பாக்களும் உள. அத்தகைய பாவிற்கு மருட்பா எனப்பெயர். மருளுதல் ஒன்றோடொன்று கலந்து மயங்குதல். அவ்வாறு வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்து மயங்கி வருகின்ற பா மருட்பா.

தன்க ணளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ண னல்கா னெனவாடு—மென்க
ணிடரினும் பெரிதா லெவ்வம்
படரினும் பெரிதாற் பாவியிப் பகலே.

இச் செய்யுளில் முதல் இரண்டடிகள் வெண்டளைகளால் செப்பலோசையோடு நடக்கின்ற வெண்பா அடிகளும், பின்னிரண்டடிகள் ஆசிரியத்தளைகளால் அகவலோசையோடு நடக்கின்ற ஆசிரிய அடிகளும் ஆகுமாறு காண்க. நான்கடிகளையுடைய இச்செய்யுள் முதலிரண்டடிகள் நேரிசை வெண்பாவாகவும் பின்னிரண்டடிகள் நேரிசை ஆசிரியப்பாவாகவும் இருக்கின்றன.

இவ்வண்ணம் வெண்பாவாகத் துவக்கி ஆசிரியமாக முடிகின்ற பாக்களெல்லாம் மருட்பா எனக்கொள்க. வெண்பாவில் துவக்கி ஆசிரியத்தில் முடியுமே யொழிய, ஆசிரியத்தில் துவக்கி வெண்பாவில் முடிகின்ற தில்லை. முடிகின்ற ஆசிரியமும் நேரிசை ஆசிரிசிமாகவே இருக்கக் காண்கின்றோம்.

மருட்பா, அளவாலும் பொருளாலும் பலவகைப் படும்.

முன் காட்டிய உதாரணத்தில் வெண்பாவடி இரண்டும் ஆசிரிய அடி இரண்டும் சமமாக வந்திருக்கின்றன. அவ்வாறு வருகின்ற மருட்பா சமநிலை மருட்பா என அழைக்கப்படும். அவ்வாறின்றி இவ்விருபாக்களின் அடிகளை ஏற்றத்தாழ்வாகப் பெற்றும் மருட்பாக்கள் வரலாம்:—

திருமால் பரனெனவே தேற்றுதற்கன் பாக
வருமாரி யன்றனையிம் மண்மேற் புலவீர்
ஒருபா னிடனென் றுணரா தவனெம்
பெருமானு மென்னுற்ற பெருமா னருள்கூர்
பத்தர தடியிணை பரவுமின் னதுவே
உத்தம விலக்கண முரைசால்
முத்தியை விளக்கு முயற்சியு மதுவே.

இதனில் முதல் நான்கு அடிகள் வெண்பாவடிகளாகவும், மற்றை மூன்று அடிகள் நேரிசையாசிரியமாகவும் வருதலான் இருபாக்களின் அடிகளும் சமம் இன்றி ஏற்றத் தாழ்வாக அமைந்திருக்கின்றன. இப்படி வரும் மருட்பாக்கள் வியனிலை மருட்பா என அழைக்கப்படும். இது வெள்ளடி மிகுந்து ஆசிரிய அடி குறைந்த வியனிலை மருட்பா. அவ்வாறின்றி, வெள்ளடி குறைந்து, ஆசிரிய அடி மிகுந்தும் வியனிலை மருட்பாக்கள் வரலாம்:—

பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந்—திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனக்
குலமுனி புதல்வனுக் கீந்த
வலைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

இதனில், முதலிரண்டடிகள் வெள்ளடிகளாக, அதனின் மிகுந்து பின் மூன்று அடிகள் ஆசிரியமாக வந்திருக்கின்றன. இதுவும் வியனிலை மருட்பாவே.

சமநிலையாயினும் வியனிலையாயினும் மருட்பா, புறநிலைவாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, எனப்பட்ட நான்குபொருள்களில் யாதானும் ஒன்றின்மீதுதான் வரும்.

புறநிலை வாழ்த்து என்பது ஒருவனை நோக்கி, "நீ வழிபடுங் கடவுள் உன்னைப் புறங்காத்து நிற்க, தீதிலா வகையில் நீ தேடிய பொருளுடன் வழிவழி சிறந்து வாழ்க" என்று அவனையும் அவன் புதல்வன் சுற்றத்தார் முதலியோரையும் வாழ்த்துவதாம்:—

தேவர் பெருமான் றிருப்பாற் கடல் கடைந்தோன்
மூவ ரெனவாழ் முதல்வ னனைத்துயிர்க்குங்
காவல் புரிவானிற் காக்கவெவர் வாக்குந்
தண்ணளி புரிமகிழ் மாறு ததியரி
ஞெண்ணிதிச் செல்வம துடனீ
மண்மிசை வாழி மதிகலந் தழைத்தே.

இச் செய்யுள் புறநிலை வாழ்த்துப் பொருள்மேல் வந்துளது. முதன்மூன்றடிகள் வெண்பாவாயும் மற்ற மூன்றடிகள் ஆசிரியமாயும் அமைந்தது. ஆதலின் இது, புறநிலை வாழ்த்துச் சமநிலை மருட்பா.

அரசியல் கோடா தரனடியார்ப் பேணு
முரசியல் தானைவேல் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இதுவும் புறநிலை வாழ்த்தாய் வந்தது. வெள்ளடி இரண்டும் ஆசிரிய அடி இரண்டும் சமமாய் வருதலின், இது புறநிலை வாழ்த்துச் சமநிலை மருட்பா.

கைக்கிளை என்பது, தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டபோது வேட்கை மிகுதியால் தாம் தாமே விளம்பிக் கொள்ளுதல். ஒருதலைக்காமம் என்றும் இதனைக் கூறுவார். காட்சி ஐயம் தெளிவு அனைய துறைகள் கைக்கிளையாகும். புறப்பொருள் வெண்பாமாலையில், 'கைக்கிளைப் படலம்' என்னும் படலத்தில் வந்துள 12 செய்யுள்களும் சமநிலைக் கைக்கிளை மருட்பாவாகும்:—

தாமரைமேல் வைகிய தையல்கொல் தாழ்தளிரிற்
காமருவும் வானோர்கள் காதலிகொல்—தேமொழி
மையய ருண்கண் மடந்தைக
ணைய மொழியா தாழுமென் னெஞ்சே

இது ஐயம் என்னும் கைக்களை மீது வந்த சமநிலைக் கைக்கிளை மருட்பா. வியனிலையாகவும் வரலாம்:—

நிழன்மணி நின்றிமைக்கு நீளார மார்பின்
அழன்மணி நாகத் தணையான்—சுழன்மணிசூழ்



பொன்னகரம் போக்கிய பூம்பனிச்சை நன்னீ
ரிளந்தளிர் மாவனுக்கு மேனி விளங்கு
நளிமலர் நறுநுத லரிவை
அளிமற் றிவ்ளோ வகலுமென் னுயிரே

இது, முதனான்கடி வெண்பாவாயும் ஈற்றிரண்டடி ஆசிரியமாகவும் வந்திருத்தலால் வியனிலைக் கைக்கிளை மருட்பா.

வியனிலையாயினும் சமநிலை யாயினும், கைக்கிளை மருட்பாவில் ஈற்றில் வரும் ஆசிரிய அடி இரண்டிற்கு மேல் இருத்தல் ஆகாதென்றும்; அவைகளில் ஈற்றடி நாற்சீராயும் ஈற்றயலடி முச்சீராயும் இருத்தல் வேண்டும் என்றும் இலக்கண நூல்கள் கூறும். எனினும், முன் காட்டிய "பருந்தளிக்கும் முத்தலைவேற்...." என்னும் உதாரணம் சிதம்பரச் செய்யுட்கோவையிலிருந்து எடுக்கப்பட்டது. கைக்கிளை மருட்பாவில் குமரகுருபர சுவாமிகள் ஆசிரிய அடி மூன்று அமைத்துப் பாடியிருக்கின்றார்.

வாயுறை வாழ்த்து என்பது, தற்காலம் வேம்புங்கடுமும்போல் கைப்பும் வெறுப்புமா யிருக்குமெனினும் பிற்பொழுதில் இன்பமும் நன்மையும் உண்டாகுமென்று மெய்ப்பொருளை உறுத்துவதாகிய வாழ்த்து:-

நில்லாது செல்வ நிலவா ருடம்படைந்தார்
செல்லா ரொருங்கென்று சிந்தித்து—நல்ல
வருள்ளம் புரிகுவ ராயின்
இருளறு சிவகதி யெய்தலோ வெளிதே

இது, வாயுறைவாழ்த்துச் சமநிலைமருட்பா. வியனிலையாகவும் வரும்:—

பொய்தீர் புலவிர்காண் மாறன் பொருளுரைதேர்ந்
தெய்தீரெய் தாது மிருந்திலீர் மெய்யாக
இன்பமுடன் துன்ப மிழவுபே றென்பவைதா
மூன்பிழைத்த வமரன் [illegible]
மாணிட [illegible]
[illegible]ண விளிவரவா லெற்றுண்டு போனதுநாட்
கூற்றுவன் செய்யுங் கொடுந்தொழிலுந் தீநரகி
னூற்ற லவைகேட்டு மடங்கிலீர் பாற்கடற்
பூரணன் மலர்மகள் புரவல னகில
காரணன் வடவேங் கடவன்
நாரணன் கழலினிப் பரவுமின் னயந்தே

இது, வெண்பாவடி எட்டாக மிகுந்தும், ஆசிரிய அடி மூன்றாகக் குறைந்தும் வந்துள வாயுறை வாழ்த்து வியனிநிலை மருட்பா.

செவியறிவுறூஉ என்பது, தற்பெருமை கொள்ளாமல், அந்தணர் அடியார் சான்றோர் அருந்தவத்தோர் முதலியோர்க்கு அடங்கி வாழ்தலே கடனென்று நல்லதோர் உபாயத்தைச் சொல்லி அறிவுறுத்துவது.

இருமூன்றி லொன்றகொண் டேதங் களைந்து
பெருமீர்மை யார்தொடர்ச்சி பேணி—யிருநிலங்
காப்பா யாகுமதி கடனென
மாப்பெருந் தானை மன்ன ரேறே

இது சமநிலைச் செவியறிவுறூஉ மருட்பா. வியனிலையாகவும் வருதற் கூடும்:—

திருமால் பரனெனவே தேற்றுதற்கன் பாக
வருமாரி யன்றனையிம் மண்மேற் புலவீர்
ஒருமா னிடனென் றுணரா தவனெம்
பெருமானு மென்னுற்ற பெம்மா னருள்கூர்
பத்தா தடியிணை பரவுமின் னதுவே
யுத்தம விலக்கண முரைசால்
முத்தியை விளக்கு முயற்சியு மதுவே.

இது முதனான்கடிகள் வெள்ளடிகளாகவும் மற்றைய மூன்றடிகள் ஆசிரிய அடிகளாகவும் அமைந்து, பக்தரது அடிகளைப் பரவி உய்மின் என்ன அறிவுறுத்தி நிற்றலின் வியனிலைச் செவியறிவுறூஉ மருட்பா.

வாழ்த்துமின் தில்லை நினைமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு—வீழ்த்த
புறநெறி யாற்று தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இதுவும் வியனிலைச் செவியறிவுறூஉ மருட்பாவாகும்.

[illegible]மேல் வருமேயன்றி மற்றப் பொருளில் வராது.

தத்தமக்குத் தனித்தனியோசையையுடைய வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பாக்களைப் போலல்லாமல் இரண்டு பாக்கள் மயங்கி வருகின்ற இம்மருட்பாவிற்கு அவைகளுடன் சேர்ந்து பாக்கள் ஐந்து என்று சொல்வதற்குரிய சிறப்பு இல்லாததாயிற்று.

யாப்பிலக்கணத்தில், உறுப்பிலக்கணமும் பாவிலக்கணமும் கூறி முடித்தோம். இனி அடுத்த ஆண்டில் பாவினங்களின் இலக்கணத்தைக் கூறுவோம்.

# களவியற் காரிகை

[977-வது பக்கத் தொடர்ச்சி]

### மேற்கோள் நூல்களைப் பற்றிய குறிப்பு.

தமிழ் மக்களாகிய நாம் நமது முன்னோர் ஈட்டி வைத்துள்ள தமிழ்நூற் செல்வத்தை அழிவெய்தும் படி புறக்கணித்து வருவதை நமக்கு எடுத்துக்காட்டி நம்மனத்தைப் புண்படுத்துவதாகும் இக் களவியற் காரிகை. இப்பெயர் என்னாற் படைத்துக் கொள்ளப் பெற்றதென முன்னுரையிற் கூறியுள்ளேன். நூற்பெயர்தானு மறியமுடியாதபடி நாம் தமிழ்நூற் பிரதிகளைப் பேணிவருகின்றோம்! இந்நிலையில் இந்நூலின் அளவைக்குறித்து யாது கூறக்கூடும்! நூலின்கண்ணே கூறியுள்ள பொருளின் அளவுகொண்டு இக் குறைப் பிரதியில் 54 காரிகைச் சூத்திரங்களுள்ளனவென்று அனுமானிக்கப்பட்டது. எஞ்சியுள்ள நூற்பொருளின் அளவு சிறிதாகவே இருத்தல்கூடும். இதனைக் கருதும் போதும், ஒவ்வொரு காரிகையுரையி னிறுதியிலும் இறையனா ரகப்பொருட் சூத்திரம் வைக்கப்பெற்றிருத்தலை நோக்கும்போதும், குறைப்பிரதியின் முதலிலும் முடிவிலும் 'இறையனாரகப் பொருட்டுறைக்குச் சங்கச்செய்யுளாக வுதாரணமெழுதியது' என வரைந்திருப்பதை யூன்றி யாராயும்போதும், இறையனார்

களவியலைப்போன்று இந்நூலின்கண்ணும் 60 காரிகைச் சூத்திரங்களும் உரையும் உளவாகலாமெனத் தோன்றுகிறது. ஆகவே 'களவியற் காரிகை' யென்ற பெயர் பெரிதும் ஏற்புடைத்தாதலும் காணலாம். இந்நூலும் உரையும் தமிழ்மக்களாற் போற்றுதற்குரியதென்று எனது முன்னுரையிற் குறித்திருந்தேன். யான் கூறியதற்குச் சான்று தமிழ்ப்புலவர் பெருமானும் தாக்ஷிணாத்திய கலாநிதியும் ஆகிய மகாமகோபாத்திய ஸ்ரீசாமிநாதையரவர்களே யாவர். சிலமாதங்களுக்குமுன்னே அவர்கள் மூன்றும் பதிப்பாக வெளியிட்டுள்ள பத்துப்பாட்டின் அடிக்குறிப்பிற் பலவிடங்களில் இந்நூற் சூத்திரங்களையும் உரையிற் கண்ட மேற்கோட்செய்யுட்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். உதாரணமாக அப்பதிப்பில் 17, 129, 171, 200, 202, 317, 319, 357, 497, 530, 575 முதலிய பக்கங்களைக் காண்க.

இவ்வரியவுரையுள் மேற்கோளாக வந்துள்ள நூல்களுள் ஒன்று இதுகாறும் மயக்கத்திற் கேதுவாய்க் கிடந்த நூற்பெய ரொன்றினைத் தெளிய வுணர்த்துகின்றது. சிற்றெட்டகம் என்ற நூலின் பெயரைச் 'சிற்றடக்கம்' எனவும், 'சிற்றட்டகம்' எனவும் பலவாறுகக்கொண்டு தமிழறிஞர் எழுதிவருகின்றனர். உதாரணமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளியிட்டுள்ள நம்பியகப்பொருள் விளக்கவுரையில் (அகத்திணையியல், சூத்திரம் 6) 'பத்துப்பாட்டும் கலித்தொகையும் ஐங்குறுநூறும் கீழ்க்கணக்கும் சிற்றட்டகமு முதலாகிய சான்றோர் செய்யுட்களெல்லாம் வேண்டிய முறையானே வைத்தலானும்' எனக் காணப்படுகின்றது. இதனடிக்குறிப்பிற் 'சிற்றடக்கம்' என்பது பிரதிபேதமாகக் காட்டப்பட்டுள்ளது. களவியற்காரிகையுரை 'சிற்றெட்டகம்' எனவே நூற்பெயரை யாண்டும் வழங்குகின்றது. இதுவே நூற்பெயராதல் வேண்டுமென்பது பெயரை நோக்கிய வளவானே உணர்தல் கூடும். ஐந்திணைகளுள் ஒவ்வொரு திணைக்கும் எட்டுச் செய்யுட்களாக நாற்பது செய்யுட்கள் கொண்ட சிறியதொரு நூலென்று இதனைக் கோடல் தகும். மேலே காட்டிய அகப்பொருள் விளக்கத்தின் உரைவாக்கியங் கொண்டும் அந்நூலின் ஒழிபியலில் (சூத்திரம் 251) 'சிற்றட்டகத்துக் குறிஞ்சிப் பாட்டு' 'சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டு' என்றுவருங் குறிப்புக்கள்கொண்டும். இந்நூல் ஐந்திணையையுங் குறித்தவொரு முறையை மேற்கொண்டு விளக்குவதென்பது பெறப்படும். ஐங்குறுநூற்றின் அச்சுப்பிரதியிறுதியிற் காணப்படுகின்ற 6 செய்யுட்களும் சிற்றெட்டகத்தைச் சார்ந்தவை யென்று அதன் பதிப்பாசிரியராகிய ஸ்ரீ ஐயரவர்கள் ஒருமுறையெனக்குத் தெரிவித்தார்கள். அவ் ஆறனுள் ஒன்றாகிய 'எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை' என்ற அத்தனைச் சிற்றெட்டகச் செய்யுளாகவே களவியற் காரிகையுரையுங் காட்டியிருப்பது கண்டு மகிழத் தக்கது. இந்நூலின் செய்யுட்கள் பல தொல்காப்பிய வுரைகளிற் பலவிடத்தும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன.

இக் களவியற்காரிகை யுரையிலே காணும் நூல்களில் ஒரு சிலவற்றைப் பற்றிப் பெயர்கள் மாத்திரமே யறியலாவன. அகத்திணை, இன்னிசைமாலை, ஐந்திணை, கிளவி மாலை, கிளவித் தெளிவு, கிளவி விளக்கம் என்னும் இந் நூல்களனைத்தும் அகப்பொருள் குறித்து வெண்பாவினால் இயன்றுள்ளன வாம். 'நெடுவேறுடக்கிய' என்று தொடங்கும் அகத்திணைச் செய்யுள் நம்பி யகப்பொரு ளுரையிலும் காட்டப்பட்டுளது. கிளவித்தெளிவு என்ற நூல் திருக்கோவையாரை யடியொற்றி யியற்றப் பெற்றதெனக் கருதுதற்கிடமுண்டு. இஃது எவ்வாறாயினும், தில்லை நகரோடு சம்பந்தமுடையதென்பது 'தில்லை நக ராரணங்கே' என்று இதன் செய்யுளொன்றில் வருவதனால் அறியலாம். வடகொங்குநாட்டுத் திங்களூர் என்ற ஊரொன்றும் இதன்கட் கூறப்பட்டுள்ளது. கிளவிவிளக்கம் என்ற நூல் 'நெய்தல்வாய்' என்றவொரு தலைநகரிலே யிருந்து 'வன்னாடு' என்ற நாட்டினை யரசுபுரிந்து வந்த குறுநிலமன்ன னொருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெற்றதாகும்.

கண்டனலங்காரம் என்றுகுறிக்கப்பெற்றுள்ள நூல் பெரிதும் ஆராய்தற்குரியதொரு சிறந்த நூலாகும். இதன்செய்யுட்களில் ஒருசில நம்பியகப்பொரு ளுரையிற்காணப்படுகின்றன. 'ஊசறெழுிலிழக்கும்' என்று வருங் கண்டனலங்காரச் செய்யுள் தண்டியலங்கார வுரையின் கண்ணும் வருகின்றது. இதனால் தண்டியலங்கார வுரையில் வரும் உதாரண வெண்பாக்களிற் பல கண்டனலங்காரத்தைச் சார்ந்தனவாதல் வேண்டுமென ஊகித்தற் கிடமுண்டு. சோழவரசர்களுள் இரண்டாம் இராஜராஜனுக்குக் 'கண்டன்' என்று சிறப்புப் பெயருள்ளமை தக்கயாகப் பரணி யுரையாலும், இராஜராஜசோழ னுலாவாலும் விளங்குகின்றது. வீரசோழிய வுரையால் வீரராசேந்திரனுக்கும் கண்டன் என்னுஞ் சிறப்புப் பெயருண்மை தெளியலாம் இப் பெயர் சோழர்க்குரிய பொதுப் பெயராகவும் சில நவீன நிகண்டுகளிற் படிக்கப்பட்டுள்ளது. இப் பெயர்பற்றிச் சிலாசாஸன வாராய்ச்சி அறுதியிடும்வரை 'கண்டனலங்காரம்' யாரைக் குறித்து இயற்றப் பெற்றதென ஒருதலையாகத் துணிந்து கூறுதல் ஏலாது. கண்டனைப் 'பூபாலதீபன்' என்றும் ஒருசெய்யுள் குறிக்கின்றது.

மேற்கோளாகக் கோவைநூல்கள் பல எடுத்தாளப் பட்டுள்ளன. அரையர் கோவையிலிருந்து ஒரு செய்யுள் தரப்பட்டுள்ளது. 'இதன்கண் தயாபரன் றஞ்சையன்னாய்' என வருகின்றது. ஆனால் இது தஞ்சைவாணன் கோவையிற் காணப்படவில்லை. அந்நகரில் அரசுபுரிந்த பிறிதோ ரரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெற்றதாதல் வேண்டும். வங்கர் கோவையைக் குறித்தும் யாதும் அறியக் கூடவில்லை. 'வங்கர் குலோத்தமன் வண் கடந்தை' என வருதலால் 'சோழர்' 'பாண்டியர்' என்பன போன்று 'வங்கர்' என்பதும் அரசகுலப் பெயரா மென்பதும், அக் குலத்தினர் 'கடந்தை' என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தனரென்பதும் அறியக் கிடக்கின்றன. தலைநகர்ப் பெயர் 'தடந்தை' யெனவும் ஒருசெய்யுளிற் காணப்படுகின்றது. பாண்டிக்கோவை என்ற சிறந்த நூலினைக் குறித்து எனது முன்னுரையிலே எழுதியிருக்கிறேன். இலக்கண விளக்கவுரைகாரர் இந்நூற்பெயரைக் குறித்திருக்கின்றனர். இந்நூற் செய்யுட்கள் நக்கீரர் களவியலுரையின்கண்ணே மிகுதியாய்க் காணப்படுகின்றன. இதுவரை மூன்று களவியலுரைப் பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. இப்பதிப்புக்க ளனைத்தினும் காணப்பெறாத பல அரிய செய்யுட்கள் களவியற்காரிகை யுரையில் வந்துள்ளன. இவை யனைத்தையுந் தொகுப்போமாயின், பாண்டிக் கோவை முழுதும் நமக்குக் கிடைக்கலாமென்று தோன்றுகிறது. இந்நூல் ஞானசம்பந்த மூர்த்திகள் காலத்தவராகிய நெல்வேலிவென்ற நெடுமாறனாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பெற்ற சிறந்த கோவை நூலாகும். இது மாணிக்க வாசக சுவாமிகளது திருக்கோவைக்குக் காலத்தால்முற்பட்டதாதல் வெளிப்படை. 'மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன்' என்றவொரு பழம்பாட்டுக் களவியற் காரிகை யுரையிற் காணப்படுகின்றது இச்செய்யுள் யாப்பருங்கல வுரையினும் வருகின்றது. இதனால் வரகுண பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட கோவை யொன்று முற்காலத் திருந்தமை பெறப்படும்.



பல்சந்த மாலையென்ற பெயருடைய நூல் ஒருசில செய்திகளைப் புலப்படுத்துகின்றது. பன்னிரு பாட்டியலிற் பல்சந்தமாலை யென்றொரு பிரபந்த வகை கூறப்பட்டுளது. இந்நூல் அப் பிரபந்தவகையைச் சார்ந்ததாக இருத்தல்கூடும். ஆனால் இதன்கணின்றுகளவியற் காரிகை யுரையிற் காட்டப்படுவன வெல்லாம் கலித்துறைச் செய்யுட்களே. இந்நூல் வச்சிரநாட்டு வகுதாபுரியில் அரசுபுரிந்துவந்த அஞ்சுவன்னத்தவர் மரபினராகிய ஓர் முகமதிய மன்னனைக் குறித்துப் பாடப் பெற்றதாகும். வகுதாபுரியை இக்காலத்திற் காயற் பட்டினம் என வழங்குவர். சைய்யித் அப்துல்காதர் (சீதக்காதி) யென்றபிரபு இந்நகரிலேயே வாழ்ந்து வந்தவர். 'மன்மதன் வச்ர நாடன் வகுதை வாழ் சீதக்காதி' யென்ற நொண்டிநாடகச் செய்யுளால் இது விளங்கும். வகுதாபுரிக்கு 'அந்துபார்' என [illegible] படுகின்றது.

[illegible]லயந்தாதி, நறையூரந்தாதி என்ற ஒரு சில அந்தாதிகளும் மழவை யெழுபது என்பதும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. இவைசிவபரமாகவுள்ள நூல்கள். கோயிலந்தாதி யென்பது திருவரங்கத்துப் பெருமானை விஷயமாகக்கொண்டு பாடிய நூல். இவற்றுள் ஒருநூலும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்நெறி விளக்கம் என்னும் அரிய இலக்கண நூலொன்று மிகவும்பாராட்டி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதுபொருளிலக்கணத்தை விவரித்துக் கூறுவது ; பல வியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகல் வேண்டும். இவ்வியல்களுட் பொருளியற் சூத்திரங்கள் சிலவற்றைக் களவியற்காரிகை யுரை தருகின்றது. ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களும் இவ்விலக்கண நூலைப் பலவிடங்களிலுங் குறித்திருக்கின்றார்கள். இதன் பிரதி ஒருசில ரிடத்தேனும் இருப்பது நமது அதிருஷ்டமே.

பொருளியல் எனப் பெயர்சிறந்த இலக்கிய நூலொன்று அடிக்கடி எடுத்துக் காட்டப்படுகிறது. இப்பெயரினை நோக்கும்போது தமிழ்நெறி விளக்கப் பொருளியலோடு நெருங்கிய தொடர்புடையதா யிருத்தல் வேண்டுமென ஊகித்தல் தகும். இவ்விலக்கிய நூல் நம்பி யகப்பொரு ளுரையிலும் தொல்காப்பிய வுரையிலும் எடுத்தாளப்படுகின்றது. 'மண்மிசை விளங்கிய வழுத்தூர் மதிதான் - நுண்ணிய றமிழி னுழை பொருள் துளித்த - வாய்மொழி யமிழ்த மடுத்தவர் மனமென' என்று வரும் செய்யுட் பகுதி இந்நூலாசிரியரின் ஆசிரியரைக் குறிக்கலாமென்று கருதப் படுகின்றது. இவ் வழுத்தூராசிரியர் தமிழ்நெறி விளக்கத்தைச் செய்தாராக இருத்தலுங் கூடும்.

மேற்குறித்தனவேயன்றி, நாற்பெயர் போலும் அறியப்படாத பல செய்யுட்களைப் 'பழம்பாட்டு' எனக் குறியீடு செய்து இக்காரிகையுரை யெடுத்துக் காட்டுகின்றது. எத்தனை [illegible] இறந்து[illegible] [illegible]முடியவில்லை. இதுவரை யிறந்துபோகாது எஞ்சிநிற்கும் நூல்களை இனியேனும் போற்றி, அவற்றிற்கு அச்சுவாயிலாக நிலைபெற்ற வடிவங் கொடுத்துத் 'தமிழ்மக்கள்' என்னும் பெயர்க்குத் தகுதியுடையாராக நம்மைச் செய்து கொள்ளுதல் நமக்குரிய முதற் கடமையாகும்.

188948

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—12. திருவடி சூட்டு படலம்.

[975-வது பக்கத் தொடர்ச்சி]

மறுத்தேதி ரிருவரும் வெறுத்த மாண்பினுர்.

தயை என்னும் முதலறத்தினைத் தழுவியதென்னப் பரதனைப்புல்லிய இராகவன், அவ்விளையோன் துன்பமுடன் தவத்திற்குரியதாய்க் கொண்டிருந்த கோலத்தைப் பன்முறை நோக்கிப் பலவு மெண்ணி, "ஐய, துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்றாய். எம்மை ஆளுடைய மன்னவன் திடமா யிருக்கின்றானோ" என்று,

அரியவ னுரைசெயப் பரத னையநிற்
பிரிவெனும் பிணியினு லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னுற்றனக்
குரியமெய் திறவிப்போ யும்ப ரானென்றான்

[உணர்தற்கரியவனுன இராமன் வினவ, பரதன், "ஐயனே, உன்னைப் பிரிதல் என்னும் நோயை வியாஜமாகக்கொண்டு, என்னைப்பெற்ற கரியாவாள் கைகேசியின் வரங்கள் என்னும் எமனால், மன்னவன், தனக்குரிய உடலை விட்டு விட்டு (சத்தியத்தை நிலைநிறுத்தி) மேலுலகம் அடைந்தான் (மேன்மை யடைந்தான்) என்றான்.]

இச்சொல், "புண்ணிடை அயில் எனச் செவிபுகா முன்" இராமன் மண்ணிடை விழுந்தனன் என்கின்ற கம்பர், புத்திர சோகத்திற்கும் பித்துரு சோகத்திற்குமுள்ள வேற்றுமையை ஒருசிறிது குறிக்கின்றார். தந்தையும் மைந்தனும் தாங்கிய அன்பு ஒரு தாத்ததா யிருக்கலாமெனினும், பிரிவின் துன்பம் தந்தைக்கு ஓரளவு பெரியதாவதே இயற்கை. இராமனை முன் அடவிக் கழைத்த கோசிக முனிவனது சொற்கள், " மருமத்தில் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தா லென்னவும்," பின் அடவிக்கு அகற்றிய கைகேசியின் சொற்கள் "வெந்த கொடும் புணில் வேல் நுழைந்த தொப்பவும்" தயரதன் செவிகளில் புக்கபெற்றியைப் பகர்ந்த கம்பர்,

இங்குப் "புண்ணிடை அயிலென" இராமன் செவியில் தயரதன் இறந்த செய்தி எய்திய தென்பதால், புத்திரனது மறதலைத் துயரம் ஓரளவு குறைந்திருக்கும் உண்மை உணர்த்தப் பெறுகின்றது. எனினும் இராமன்தான் உற்றதுயரோ மிகப் பெரிது. பிரிந்த தந்தையை உன்னிப் புலம்புவானாய்ப் பற்பல பன்னலுற்றான்:—

நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ வினிவாய்மைக் காருளரோமெய்யுற்றார்.

[அவியாத விளக்கு அனைய நாயகனே; உலகிலுள்ளவர்க்கெல்லாம் தந்தையே, ஒன்றோடும் சாராது தனி நிற்கும் மூதலறத்தை வளர்க்கும் தாய் போன்றவனே; தயைக்கு இருப்பிடமானவனே; என் தந்தையே; பகையரசர்களுக்குச் சிங்கம் போன்றவனே—நீயும் மாண்டனையே. ஐயோ, சத்தியத்திற்கு உண்மையான உறவினர் இனியார் உளர்]

தயரதனது திருவையும் அன்பையும் அறத்தையும் ஆற்றலையும் பாராட்டிப் புலம்பிய இராமன் இறுதியில் அவன் வாய்மையை வற்புறுத்திய கொள்கை இங்கு மிகவும் முக்கியமாய் நிற்கின்றது. இதன் பின், "வரனில் உந்தை சொல் மரபினால்" எனத் துவக்கும் செய்யுளில், சுல்கச் சூளாக உரைத்த வாய்மைக்கு மாறாகத்தயரதன் நடக்கநினைத்தானென இராமன் பரதனுக்கு அறிவுறுத்தினானென்று ஸ்ரீமான். சோமசுந்தர பாரதியார் தம்முடைய "தயரதன் குறையும் கைகேயி நிறையும்', என்னும் நூலில் குறிக்கின்ற கொள்கையை, இப்பொழுது இராமன், "அந்தோ வினி வாய்மைக்கு ஆருளர் மெய்யுற்றார்" எனப் புலம்பும் சொற்கள் முற்றிலும் மறுக்கின்றன. தயரதன் பொய்த்தனன் என்றறிந்தும் இராமன் அவனது வாய்மையை இவ்வண்ணம் சிறக்கப் பாராட்டினன் என்றெண்ண ஒண்ணாது. பின்னரும் இராமன் இன்னவாறு புலம்புவான்—

சொற்பெற்ற நோன்பின் துறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்கி நீயியற்றி
எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கலோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்

[பகைவர்க்கு அச்சம் விளைக்கப் பெற்றதும் வெற்றிக்குரிய கொலைத்தொழில் வாய்ந்ததும் ஆன கூரிய வேலாயுதத்தை யுடையவனே, புகழுடைய தவத்துறையில் முதிர்ந்த கலைக்கோட்டு முனிவனது அருளை வேண்டி (அவனது உதவியால்) நன்மை வாய்ந்த யாகத்தை நீ குற்றமில்லாமல் செய்து என்னை மைந்தனாகப் பெற்று அதனால் நீ அடைந்த பயன், இனிய உயிர் நீங்கிப் போய்விடுவது தானோ !]

மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான் சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்த வாறிது
உன்னுயிர்க்குங் கூற்றா யுலகாள வுற்றேனோ [வோ
மின்னுயிர்க்குந் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வே
[லோய்

[மகரந்தப் பொடிகளைச் சிந்துகின்ற பூமாலையை அணிந்தவனே, ஒளி வீசுகின்ற வெப்பமுடைய வெயிலை வீசுகின்ற வெள்ளிய வேலை உடையவனே—நிலைபெற்ற பிராணிகளுக்கு அருள்செய்கின்ற உரிமையுடைய அரசாட்சியை நான் தாங்க, நீ அந்தப் பாரம் நீங்கி இளைப்பாறிய விதம் இது தானோ! உன் உயிரிற்கும் எமனாகி அழிவு செய்பவனாய், நான் அன்று அரசாளச் சம்மதித்தேனோ].

எம்பரத்த தாக்கி யரசுரிமை யிந்தியங்க
டம்பரத்த தாக்கித் தவமிழைத்த வாறிதுவோ
சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளிச் சதமகறன்
னம்பரத்தி னீங்கா வரசளித்த வாழியாய்

[சம்பரனென்னும் அசுரனை வீழ்த்தி, தேவேந்திரனுடைய ஆகாயத்திலிருந்து விலகாத அரசாட்சியை, அவ்விந்திரனுக்குக் கொடுத்த சக்கிரவர்த்தியே, அரசு உரிமையை என்வசமாக்கி உன் இந்திரியங்களை அடக்கித் தவம் செய்ய வேண்டுமென்று நீ முயன்றதன் முடிவு இதுதானோ]

வேண்டுந் திறத்தாரும் வேண்டா வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லான் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தே நோக்கவோ.

[எல்லாவற்றையும் வேண்டுகின்றவர்களும், (இந்தப்பாரமட்டும்) வேண்டா வென்று வெறுக்கின்ற அரசாட்சியை ஏற்றுக்கொண்டதால் இவ்வுலகத்திற்குத் துன்பம் விளைவித்த அற்பனாகிய நான், இறந்து முடிவதன்றி மாயாத இவ்வுடலைக் கொண்டு ஆண்டுவருவது இனியார் முகத்தில் விழிப்பதற்கோ]

தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுகந்தே
யூனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய்

[ஊன்பருத்த பகைவரது உயிரைத்தைத்த ஒளிபொருந்திய வேலாயுதத்தை யுடையவனே, தேன் பொதிந்த சோலைகளுடைய கோசல நாட்டை விட்டுக் காட்டை நான் அடைந்தேன் என்பதற்குப் பொறுக்காமல் அரசனே நீ விண்ணுலகம் சேர்ந்தாய்; நானோ நீ இறந்ததை அறிந்தும் உயிர்வாழ்க்கையை விரும்பி இன்னமும் பிழைத்திருக்கின்றேனே.]

[கில்லாத்
வண்மைஇயு மானமுமேல் வானவர்க்கும் போக்க
திண்மைஇயுஞ் செங்கோ னெறியுந் திறம்பாத
உண்மைஇயு மெல்லா முடனேகொண் டேகினையே
தண்மைஇ தகைமதிக்கு மீந்த தண்குடையோய்

[பெருமைவாய்ந்த சந்திரனுக்கும் குளிர்ச்சியளித்த ஒப்பற்ற குடையையுடையவனே, உன் வண்மையையும் மானத்தையும் மேலுலகத்திலுள்ள தேவர்களாலுந் தடுக்க முடியாத வலிமையையும், செங்கோல் முறையையும், தவறாதசத்தியத்தையும் மற்றெல்லா நற்குணங்களையும் உன்னுடனேயே எடுத்துக்கொண்டு சென்றாயே]

இவ்வண்ணம் துயருழக்கும் இராமனைத் தம்பியரும் தானைத்தலைவரும் மற்றுள மன்னரும் மாதவர்களும் சூழ்ந்து பரிவுபாராட்ட வசிட்டன், யாக்கை நிலையாமைமுதல் விதியின்வலிமை யீறாக இச்செவ்விக்குரிய யாவுங் கூறித் தேற்றலுற்றான்:—"இறத்தலும் பிறத்தலும் மன்னுயிர்க்கியற்கை. அறவும் தருமநெறியுந்தவிர வேறோர் துணையில்லை கூற்றவனுக்குக் கருணையென்ப துண்டோ. பிறப்பதன் முன்னே சாவோரைக் கண்டிருக்கும் நீ, அறுபதினாயிரம்ஆண்டு மாண்ட ஒருவனுக்கு இரங்கலாமோ. திரிமூர்த்திகளாலுந்தான் காலத்தைக் கடக்கக்கூடுமோ. பஞ்சபூதங்களுமே அழியவேண்டியவை என்றபோது ஒரு உயிர்க்காக நீ வருந்தலாமா.

புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதியென் றீயினி
லெண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினா
லண்ணலே யவிவதற் கையம் யாவதோ



[இராமனே, புண்ணியமாகிய வாசனையுடைய நெய்யில், ஒப்பற்ற காலமாகிய வலிய திரியில், விதியென்ற நெருப்பினால் கருத்துடன் எரிகின்ற உயிராகிய விளக்கு, நெய் திரி என்னும் அவ்விரண்டும் ஒழிந்துபோனால் அவிந்து போவதற்குச் சந்தேகம் ஏனோ]

"மறைகளின் வரம்பு கண்ட நீ இவைகளை மறத்தலாகாது. ஆதலால் அவலிப்பாயலை. கண்ணீருகுப்பதொழிந்து இனி அவர்க்கு உன் தாமரைக் கைகளால் தர்ப்பணம்செய்ய வா" என்றனன். நாயகன் உடன்வர நடந்த கானகமும் நன்னகரொத்ததென்றிருந்த சீதையும் இச்செய்தி கேட்கத் துயர்க்கடல் அடிவைத்தாள். பின்னர் எதிர்வந்த தன் தாய்மாரை நோக்கி, "எந்தை யாண்டையான் இயம்புவீர்" என இராமன் புலம்ப அங்கிருந்த மங்கைமார் அனைவரும் தீயில் விழுந்த மெழுகில்தேம்பினர். அச்சமயம், தன்குலத் தயரதற்குத் தானும் நீர்க்கடன் செய்யப்புக்கானெனக் கதிரவனும் கடலில் மூழ்கினன்.

இனித் தான் வந்த காரியத்தைப் பரதன் விளம்பத் தொடங்குகின்றான். தந்தை பூட்டிய அரசை இராமனும் அன்னை பூட்டிய அரசைப் பரதனும் ஏற்க மறுத்து நிற்குமிந்நிலையும் அது முடிந்தவாறும் நாடகச் சிறப்புஞ்சுவையும் மிகவுடையபாசுரங்களில்பொதிந்து விளங்குகின்றன.

வரதன் துஞ்சினன் வைய மாணையாற்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொல் வேண்டுவான்
பரத கூறெனப் பரிந்து கூறினன்

["தயரதன் இறந்தான். அவன் கட்டளைப்படி இவ்வுலகம் நிச்சயமாக உனதே. ஆயினும் நீ முடி தரிக்காமல் தவவேடம் விரும்பியது என் [illegible]

என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கிநீ
யன்றி யாவரே யறத்து ளோரதர்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான்

[என்று இராமன் வினவுதலும் பரதன் பதைத்தெழுந்து கைதொழுது நின்று இராமனை நெடிதுநேரம் நோக்கி, "நீ யல்லாமல் தருமநெறியில் நிற்பவர் யார் உளர். அவ்வறமாகிய அரிய நெறியினின்று நீ பின்னிடுவாயோ" என்று மேலே கூறலுற்றான்]

'அரசனாணையால் வையம் நின்னதே சரதம்' என்று தன்னை நோக்கி இராமன் பகர்ந்த சொற்கள் வெறுப்பாலோ, மற்றுத் தன்தன்மை யறியாததாலோ, அல்லாக்கால் தன்னைச் சோதிக்கவோ நேர்ந்தன வென்று ஐயுற்ற பரதன் அண்ணலை நெடிது நோக்கி, "முறை யிகந்த இவை கூறல் நினக் கறமன்று" என்று பின்னரும்,

மனக்கொன் றாதன வரத்தி னின்னையு
நினக்கொன் றாநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றாடருந் தனய னாதலா
லெனக்கொன் றாதவ மடுப்ப தெண்ணினால்

[பெரியோர் மனத்திற்குப் பொருந்தாத வரங்களால், உன்னை உனக்குத் தகாத நிலையில் நிறுத்திச் சக்கிரவர்த்தியையும் கொன்றவள் பெற்ற பிள்ளையாதலால், யோசிக்குமிடத்து, தவம் எனக்குத் தகுவதொன்று ஆகுமா]

எனத் தன்னைப்பழித்துக் கொள்வான்போல் இராமனது இரக்கமின்மையை எடுத்துக் கூறி

நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன் தவஞ்செய் வேனலேன்
யாவ னாகியிப் பழிநின் றேறுவேன்

[வருந்தும்படி இவ்வுலகைத் துன்புறுத்திய பாவியின் வயிற்றில் பிறந்த பெரும்பாவியாகிய நான், சாகும்வகையும் அறிகிலேன், தவமும் செய்வதற்கில்லை. பின் எவ்வண்ணமாகி இந்தப்பழியைக்கடந்து கரையேறவல்லவன் ஆவேன்] என்று தன் ஆற்றாமையைத் தோற்றுவித்து,

பிறந்து நீயுடைப் பிரிவி றால்பதம்
துறந்து மாதவந் தொடங்கு வாயென்றால்
மறந்து நீதியிற் றிறம்பி வாளிற்கொன்
றறந்தின் றாலென வரச தாள்வெனோ

[பிறப்பினால் உனக்குச் சொந்தமாய்ப் பிரியலாகாப் பழைய பதவியைக் கைவிட்டு நீ பெரிய தவத்தைத் தொடங்குவாய் என்றால், யான், மறந்தாயினும் நீதி வழுவி அறத்தை வாளினாற் கொன்று தின்பதுபோல் இவ்வரசை ஆள்வேனோ]

என மறுத்து,

தொகையி லன்பினா லிறைவன் றுஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனா யரசு வவ்வயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன்

[உன்பால் அளவில்லாத ஆசையால் தயரதன் இறக்க நீ, புகைகின்ற கொடிய கானகம்புக, அவ் வற்றம்பார்த்துச் சூழ்ச்சியால் முறையற்ற வஞ்சனாய் அரசைக் கவர்ந்து கொள்ளச் சோர்கின்ற சமயம் பார்த்திருக்கும் பகைவனோ நான்]

உந்தை தீமையு முலகு றாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையு
மெந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினான்

[உன் தந்தை செய்த தீமையும், உலகிற்கு ஒவ்வாத துன்பத்தை விளைத்த பாவியாகிய என்தாய் செய்த தீமையும் நீங்கும் வண்ணம், என் அப்பனே, நீதிரும்பிவந்து அரசுபுரிவாயாக" என்று பரதன் தன் எண்ணமெல்லாந் தெரியக் கூறினான்]

இப்படியும் பரதனே உரைப்பனோவென இராமன் வியப்பெய்தினான். இராமனைக் காடாளவும் பரதனை நாடாளவும் ஆணை தந்தனன் தந்தையோடு மன்னனுமாகிய அத் தயரதன். அவ்விரண்டிற்கும் மாறாக முயல்கின்றவோர் மைந்தனும் ஆவனோ கடனறிந்தொழுகும் இப்பரதன் என இறும்பூதெய்திய இராகவன், ஒருகால் தாங்கருந்துயரத்தால் நைந்து இற்றதோ இவன் மனம்என எண்ணி, அம்மனத்தை ஆற்றித் தேற்றுவிக்கத் தொடங்கி முதலில்,

முறையும் வாய்மையும் முயலு நீதியும்
மறையு மேன்மையோ டறனு மாதியாந்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
விறைவ ரேவலா லியைவ காணையா

என, அரசனது ஆணைக் கமைந்த மகிமையை நினைப்பூட்டி,

பரவு கேள்வியும் பழுதின் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்

உரவி லோயதொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்

எனப் பெரியோர் சிறப்பையுஞ் செப்பி,

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினுல்
தந்தை தாயரென் றிவர்க டாமலா
லெந்தை கூறவே ரெவரு மில்லையால்

என அப்பெரியோரும் பெற்ருேரன்றி வேறிலர் என்பதை நிறுவி, ஆதலின்

தாய்வ ரங்கொளத் தந்தை யேவலான்
மேய நங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்த னீர்மையோ
வாய்வ ரும்புலத் தறிவு மேவினுய்

[தாய் வரம் பெற்றுக்கொள்ள, தந்தையின் கட்டளையால் நம் குலத்திற்குப் பொருந்திய தருமத்தை நான் விரும்பி ஏற்றுக்கொண்டேன். பிறகு, உன் வேண்டுகோளுக்கு இணங்கி நான் தவறுதல் தக்க தாகுமா—ஆராய்ந்த நூல்களின் அறிவுடையோனே]

எனப் பரதன் மொழிக்குத் தான் இணங்கமாட்டா நிலைமை எய்தியிருப்பதை எடுத்தியம்பினுன். ஈற்றடியில் மோனை வேண்டாது பொருள் செய்தக்கால், 'வாயில் வந்ததைப் பேசுவதே அறிவென்று விரும்புகின்ருய்'' எனப் பரதனைச் சிறிது கழறிய குரலுந் தொனிக்கின்றது. இத்தனை ஓதியும் தன் கருத்தை மாற்ருக்குறி பரதன் முகத்தில் தோன்றியதும் இராமன் அவ்வாறு அவனறிவிற்குக் குறைகூறக் காரணமாயிருக்கலாம். இனிப் பரதனும் தருமந்தவிர்தலாகாதென்பதைத் தெரிவித்து,

வரனி னுந்தைசொன் மரபி னுனுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையா
லுரனி னீபிறந் துரிமை யாதலா
லரசு நின்னதே யாள்க வென்னவே

மன்னன் ஆணைவழி பரதனை நிற்குமாறு இராமன் இறுதியில் விதிக்கலாயினுன்.

இதனைக் கேட்டவுடன் பரதனுக்கோர் ஊக்கம் உதித்தது.

முன்னர் வந்துதித் துலக மூன்றினு
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யா னின்று தந்தனென்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடெனு

[எனக்கு முன் பிறந்து, மூன்றுலகங்களிலும் உனக்கு ஒப்பில்லாத நீ பிறத்தற்கிடமான இப்பூமி என்னுடையதாகில், யான் இப்பொழுதே உனக்குக் கொடுத்து விட்டேன். ஆகையால், அரசனே, நீ வந்து முடி சூடிக்கொள், என்றும்]

மலங்கி வையகம் வருந்தி வைகநீ
உலங்கொ டோளுனக் குறுவ செய்தியோ
கலங்கு ருவணங் காத்தி போந்தெனுப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினுன்

[உலகம் கலக்கமுற்று வருந்தி நிற்க, கற்போன்ற உன் தோள்களைக் கொண்டு இக்கானகத்தில் உன்னைக் காத்துக் கொள்வதற்கு வேண்டியவைகளைமாத்திரஞ் செய்து கொண்டிருப்பாயோ! உலகம் கலங்காவண்ணம் நீ வந்து அதனைக் காக்கக்கடவாய் என்றும் இராமனது அழகிய பாதங்களைப் பிடித்துக்கொண்டு பரதன் வேண்டினுன்]

கேட்டனன் இதனை இராமன். பரதன்தன் பேதைமைக்குப் பெரிதும் பரிந்தனன். தன்னுடைய அரசினைத் தருதற்குஉரிமை பரதனுக்கிருக்கலாம். ஏழிரண்டாண்டு தான் கானகத் துறைதல் வேண்டுமெனக் கோத்தந்தை இட்ட ஆணையும் இதனுல் தீர்ந்ததாகுமோ. அத்திறத்தினை ஓராதுரைத்த பரதனைநோக்கி,

பசைந்த சிந்தைநீ பரிவின் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யோவசைக்
கசைந்த வெந்தையா ரருள வன்றுநா
னிசைந்த வாண்டெலா மின்று டேறுமோ

[அன்புடைய சிந்தையில் நீ விருப்பினேடும் உலகத்தை என்வசமாக்கி விட்டாலும் அது முறையாகுமோ. பழிக்கு அஞ்சிய என் தந்தையார் எனக்கு வனவாசம் அளிக்க அதற்கு நான் சம்மதித்த வருடங்களெல்லாம் இன்றையோடு முடிந்ததாகுமா]

எனவிளம்பி, வாய்மையிற் சிறந்தோர் தூய்மை இல்லாமையான் தான் உரைதிறம்பி ஊர்திரும்ப ஒண்ணுதென்பதும் உணர்த்தி அதன்மேல்,

எந்தை யோவாண் டேழொ டேழெனு
வந்த காலநான் வனத்துள் வைகநீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையா
லந்த நாளெலா மாளென் ணுணையால்

[என் தந்தை ஏவியபடி பதினன்கு வருடம் நான் வனத்துள் வைக, நீ எனக்கு இப்பொழுது கொடுத்த பூமியை யாருடைய வாய்மைக்கும் பழுதுருவகை, என்னுடைய ஆணையால் அந்தப் பதினன்கு வருடகாலம் ஆளக்கடவாய்]

என்றதற்கும் இணங்கா முகமுடைய பரதனை, ''மன்னவன் இருக்கும்போதே அவன் ஆணையை மறுக்க அஞ்சி மகுடம் சூட்டிக்கொள்ள ஒவ்வினேன் நான்; நீயோ என் ஆணையை மறுக்க நினைக்கின்ருய்; அது நேரன்று. யான் சொல்வழி நில்'' எனப் பணித்தனன்.

அருகிருந்த வசிட்டன் அறவுயிர்த் திருவர் மைந்தரையும் பரிந்து நோக்கினுன். இராமன் அவதரித்த கருமமெல்லாம் அறிந்திருந்தானுயினும், அவனை விட்டுப்பிரிந்திருக்கத் தரித்திலன். "அரக்கர் வாழினும் வாழ்க இக்கரிய செம்மலை விட்டு யான் பிரிந்திரேன்'' எனப் பேதுறவெய்தி, அண்ணன் இட்ட ஆணைக்குத் தம்பி இணங்காமுன் தான் தடுத்துவிடவேண்டும் என்று எண்ணினுன்போல் அப்புரோகிதன், பெற்றவரிற் பெரியவர் நல்லாசிரியராவதைக் கூறி,

என்றலால் யானுனை யெடுத்த விஞ்சைக
ளொன்றலா தனபல உதவிற் றுண்மையால்
அன்றெனு தின்றென தாணை யையநீ
நன்றபோந் தளியுனக் குரிய நாடென்ருன்.

ஈன்ருேர் பணியைமறுக்காது ஒழுகி நின்ற அறத்திற்கு, குருவின் வாசகம் மாற்ருகலாமெனினும் உரைத்த உண்மை மொழி பொய்ப்பதற்கது உதவாதென்பதை மறந்த அவ்வேதியனை நோக்கி,

சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகமெய்ப் புதல்வ ராகதான்
தேன்தரு மலருளான் சிறவ செய்வனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ.



எனச் சாற்றினுன். "யான் யாவரினும் பெரியோன், ஆதலின் என் ஆணைக்கு அடங்குக'' எனக் கழற வந்த முனிவன், அனைத்தறத்தினும் பெரியது வாய்மை என்பதை மறந்தானுதலின், அவனை இராமன் 'சிறுவ' என்றழைத்தது ஏற்புடைத்தே. 'உன் ஆணையும் அதன் முன் உரைத்த என் வாய்மையும் இணங்குமாறு நீயே இயம்பு'' என்றதற்கு அம்முனிவன் வாளாவிருத்தலன்றி வேறென் செய்யவல்லான். அதற்கிடையில் பரதனும், "அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடு நான் பணிபடர் காடு உடன்படுதல் மெய்', யென்று முடிவுரை பகர்ந்து வாளாவிருந்து விட்டனன்.

அமரரோ இதற்கு ஆற்ருர். பரதனும் உடன் சென்ருல் பிற்றை நாள் மாயமான் சூழ்ச்சி முற்றுப் பெருமல் தம் கருமம் சிதைவுறும் எனவோர்ந்து, "பதினன்கு வருடகாலம் இராமன் காட்டிலிருக்க, நீபோய் நானிலங்காத்தல் உன் கடன் '' என்று வானின்று கூறினர். உடனே இராமன்,

வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தன னினியென் ணுணையா
லானதோ ரமைதியி னளித்தினி பாரெனுத்
தானவன் துணைமலர்த் தடக்கை பற்றினுன்

இதன்மேலும் என் செய்யவல்லான்பரதன்!

ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலங்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமிது சரதநின் ணுணை சாற்றினேன்.

என்றதற்கு இராமனும், 'அன்னதாகுக' என்று ஒவ்வுதலும்,

விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மையின் திருவடித் தலந்தந் தீகென
வெம்மையுந் தருவன் விரண்டு நல்கினுன்

நல்கிய,

அடித்தல மிரண்டையு மழுத கண்ணினுன்
முடித்தல மிவையென முறையிற் சூடினுன்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினுன்
பொடித்தல மிலங்குறு பொலங்கொள் மேனியான்

சென்று,

நந்தியம் பதியிடைநாதன் பாதுகஞ்
செந்தனிக் கோன்முறை செலுத்தச் சிந்தையா
னிந்தியங் களையவித் திருத்தன் மேயினுன்
அந்தியும் பகலுநீ ரருத கண்ணினுன்.

இவ்வாறு, எம்பெருமான் பாதங்களைத் தீண்டிய பாக்கியத்தால் பாதுகை அரியணையில் அரசு வீற்றிருக்க, அப்பாதங்கள் தாம் கானும் மலையுங் கடலுங் கடந்து இமையோர் இடுக்கண் களைதற்கு மேல்செல்லலாயின.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

## வர்த்தமானம்

இந்தியாவின் தேவை :—லக்னௌ சர்வகலாசாலைப் பட்டமளிப்புவிழாவில் புரொப்ஸர். ஸர்.எஸ். இராதாகிருஷ்ணன் நிகழ்த்திய சொற்பொழிவு வருமாறு:—

ஒரு மனிதனது வாழ்க்கையிலே [illegible] நிகழும். இந்தியாவின் தற்கால நிலை பிற்காலச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியர் இப்பொழுது அரசியல் சுதந்திரம்பெற மிகவும் விழைகின்றனர். பிரிட்டிஷார் இந்தியா வந்த சமயம் இருந்த குழப்பநிலை இப்பொழுது இல்லை. அவர்கள் வரவால் இந்தியா அமைதியடைந்துள தென்பதை எவரும் மறுக்க முடியாது. அரசியல் விடுதலை உணர்ச்சிக்கும் மனிதன் தன் மதிப்பு உணர்ச்சிக்கும் ஐரோப்பிய நாகரிகமே காரணம். என்ருலும் அன்னியஆட்சியினுல் தேசத்தின் மதிப்பும், மனிதத் தன்மையும் அகன்றுள்ளன. இதையும் எவரும் மறுக்க முடியாது. எனவே பிரிட்டிஷார் இந்தியருக்கு இனி அரசியல் சுதந்திரத்தைத் தருவதே முறை.

காலச் சக்கரம் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுபின் செல்லாது, ஓரே நிலையிலும் நில்லாது. காலநிலைக்கு ஏற்றபடி நாமும் முன்னேற வேண்டுமெனில் மாறிக் கொள்ளவேண்டுவது மிகவும் அவசியமாகும். நியாயமான அரசியல் உணர்ச்சியை அடக்குமுறையால் நசுக்க முடியாது. இந்தியரும் பலாத்காரமுறையில் அரசியல் விடுதலை பெறமுடியாது. இந்தியாவிற்குச் சுயராஜ்யம் வந்துவிட்டவுடன் எல்லா நலமும் தானுக வந்துவிடும் என்று எண்ணிவிட வேண்டா. சுயராஜ்யம் கிட்டியவுடன் எல்லோரும் சந்தோஷமாயும் திருப்தியாயும் வாழலாம் என்று கருதவேண்டா. உண்பதற்கு அதிகமான அகாரமும், உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு வீடும் எல்லாரும் பெறுமாறு சுயராஜ்யம் செய்துவிடாது. சுயராஜ்யத்திற்கு அடிப்படையாயிருப்பது சமுக ஒழுங்கு. அவ்வொழுங்கு ஏற்படச் சத்தியமும் சுதந்திமுரம் சமத்வ உணர்ச்சியும் தேவை. [illegible] முயலவேண்டும்.

இன்னதற்கு, நம்மிடமுள்ள மூடக் கொள்கைகள் பல அகல வேண்டும். பல பழக்க வழக்கங்கள் நம்மை முன்னேற விடாது தடுக்கின்றன. இளைஞர்களே இச் சீர்திருத்தவேலையை ஏற்கவேண்டும். இப்பொழுது இளைஞர்களிடம் ஒரு வேகம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இதைக் காணப் பலர் அஞ்சுகின்றனர். இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியைக் கண்டு நான் அஞ்சவில்லை. நமது சமுகம் காலத்திற்கேற்றபடி திருத்தமுறவும், ஓர் முற்போக்கான ஒழுக்கம் ஏற்படவும் இக்கிளர்ச்சி மிகவும் வேண்டற்பாலதே. கலாசாலைப் படிப்பு முடித்தவர்கள் சமுகத் தொண்டில் ஈடுபடவேண்டும்.

இந்திய அரசியல் இயக்கம் புதுமுறையில் நடக்கின்றது. அகிம்ஸையையே அடிப்படையாக இவ்வியக்கம் கொண்டுளது. ஆனுல் அரசியல் தலைவர்களில் பலர் அஹிம்ஸைவழி நடப்பதாகத் தெரியவில்லை. வெற்றியைப் பெறவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்ருர்களேயொழிய வழியைப்பற்றிக் கவனிப்தில்லை. எனவே இந்தியர் சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்தியா புது வழியில் விடுதலை பெறுவதே சிறப்புடையதாகும். மேலும் சாஸ்திரஞானம் இந்தியரிடையே பரவவேண்டும். மனித சந்தோஷ வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிர்த்திக்கும் சாஸ்திரவாராய்ச்சி துணைபுரிய வல்லது. இதுவே நான் மாணவர்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். சத்தியமும் அஹிம்[illegible]இந்தியாவை முன்னேற்றி[illegible]

## 1931-வது வருஷத்திய வால்யூம் 4. அட்டவணை

(ஜூலை முதல்—டிசம்பர் வரையில்)

### தலையங்கம்.


| இதழ். | | | பக்கம். |
|---|---|---|---|
| 26 | பூணைப்பூசல் | | 501 |
| 27 | அருமையினுமருமை | 1 | 521 |
| 28 | ,, ,, | 2 | 541 |
| 29 | ,, ,, | 3 | 561 |
| 30 | ,, ,, | 4 | 581 |
| 31 | முனையாமல் தீரும் மூலகாரணம் | | 601 |
| 32 | நீட்டியளப்பதோர் கோல் | | 621 |
| 33 | உயிருடை யுயர்வு | | 641 |
| 34 | வாசா கைங்கரியம் | 1 | 661 |
| 35 | ,, ,, | 2 | 681 |
| 36 | மறப்பது முறையாமே | 1 | 701 |
| 37 | ,, ,, | 2 | 721 |
| 38 | ,, ,, | 3 | 741 |
| 39 | ,, ,, | 4 | 761 |
| 40 | ,, ,, | 5 | 781 |
| 41 | புதியன பிதிரலாமே | | 801 |
| 42 | கடவுளும் காந்தியடிகளும் | | 821 |
| 43 | அரவிந்தர் திருவாக்கு | | 841 |
| 44 | நல்லாள் நகை | 1 | 861 |
| 45 | ,, ,, | 2 | 881 |
| 46 | ,, ,, | 3 | 901 |
| 47 | ,, ,, | 4 | 921 |
| 48 | ஷேக்ஸ்பியர் பெருமை | | 941 |
| 49 | விதியே மதியோ | | 961 |
| 50 | நான்கவதாண்டின் நிறைவு. | | 981 |


### கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம்.


நகர் நீங்கு படலம்.

26 அச்சுதா ஞுழ்ந்ததோ நினைவுதா னீண்டதோ 515
27 தனக்கென முனியாத் தனிப்பெருந் தகையோன் ... 527
28 கற்றிலே னீந்ததோ யாது மில்லேன் ... 554
29 மன்னவன் மைந்தனுய் மாற்றம் பேசவோ 571
30 சொல்லப்படுமோ விச்சொல் ... 594
31 வைத வைவிலா வள்ளல் மாக்கதை ... 603

தைலமாட்டு படலம்.

33 அரக்கிமூக்கரிவதன்றி இளவலைப்பிரியநேரார் 650
34 எஞ்சிய வுடம்பும் எய்திய பெரும்புகழ் ... 671
35 குணமெனும் குன்றுபோல்வார் பொறுமையிற் கடலுமாவார் ... 694

கங்கைப் படலம்.

36 கங்கையிற் சிறந்ததோ கோதா விரியே ... 703
37 கங்கை வேடனும் காளத்தி வேடனும் ... 732

வனம்புகு படலம்.

38 சீலத்தால் சேரும் நலம் ... 743

சித்திரகூடப் படலம்.

39 பாந்தளும் படியெனக்கிடத்தல் விந்தையோ 776

பள்ளிபடைப் படலம்.

40 குணங்களுக்கிணங்கியே குறித்த மாற்றமோ 795
41 தாயென வன்றியே தீயென செய்வனோ... 810
42 பரதன் தருமும் வியக்கற்பாலதோ ... 828
43 முதலினிற்பெற்ற மேன்மை முடிவினிற் சிறந்ததம்மா ... 852

ஆறுசேல் படலம்.

44 மாற்றிக் கூறும் ஆற்றலோ பெரிது ... 876

குகப் படலம்.

45 உண்ணெகிழ்ந்துரைக்கு மண்ணல்வேட்டுவன் 892
46 குகனது பாதம் வீழ்தல் குறையிலை பாதற்கம்மா! ... 917
47 இடருங் கடந்த ஏழைக் கைகயி ... 937

திருவடி சூட்டு படலம்.

48 வள்ளுவர்க்குறுபொருள் வரகவிஉணர்த்தினர் 953
49 புலமையின் சிகரமேறப் புதுப்பொருள் விளங்கும் மேன்மை ... 973
50 மறுத்தெதிரிருவரும் வெறுத்த மாண்பினுல் ... 991


### யாப்பிலக்கணம்.


| | | |
|---|---|---|
| 26 | அசை, சீர், தளை, அடி, தொடை | 514 |
| 27 | செய்யுள்-ஓசை | 534 |
| 28 | செய்யுள்-வெண்பா | 548 |
| 29 | செய்யுள்-வெண்பாவோசை | 569 |
| 30 | குறள், சிந்தியல், வெண்பா | 590 |
| 31 | சிந்தியல் வெண்பா | 614 |
| 32 | நேரிசை இன்னிசை வெண்பா | 631 |
| 33 | பஃறொடை வெண்பா; வெண்பா ஈறு | 653 |
| 34 | ஆசிரியப்பா-நேரிசை யாசிரியப்பா | 669 |
| 35 | நிலைமண்டில ஆசிரியப்பா அடிமறிமண்டில ஆசிரியப்பா இணைக்குறளாசிரியப்பா | 692 |
| 36 | ஆசிரியப்பாவில் தொடை யமைப்பு | 716 |
| 38 | கலிப்பா | 753 |
| 39 | நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா | 772 |
| 40 | அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா | 788 |
| 41 | வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா | 815 |
| 42 | வெண் கலிப்பா | 835 |
| 43 | கொச்சகக் கலிப்பா | 855 |
| 44 | ,, ,, | 874 |
| 45 | ,, ,, | 898 |
| 46 | ,, ,, | 913 |
| 47 | வஞ்சிப்பா | 936 |
| 50 | மருட்பா | 988 |


### சூளாமணி.


| இதழ். | | | பக்கம். |
|---|---|---|---|
| 26 | மந்திரசாலைச் சருக்கம் | (17-27) | 505 |
| 27 | ,, ,, | (28-37) | 523 |
| 28 | ,, ,, | (38-48) | 546 |
| 29 | ,, ,, | (49-61) | 565 |
| 30 | ,, ,, | (62-66) | 585 |
| 31 | ,, ,, | (70-80) | 608 |
| 32 | ,, ,, | (81-90) | 628 |
| 33 | ,, | (91-100) | 655 |
| 34 | ,, | (101-109) | 674 |
| 36 | ,, ,, | (110-118) | 710 |
| 37 | ,, ,, | (119-124) | 730 |
| 38 | ,, ,, | (125-137) | 751 |
| 39 | ,, ,, | (138-148) | 770 |
| 40 | ,, ,, | (149-161) | 790 |
| 41 | ,, ,, | (162-168) | 817 |
| 42 | ,, ,, | (169-182) | 833 |
| 43 | ,, ,, | (183-192) | 845 |
| 44 | தூது விடுசருக்கம் | (1-10) | 872 |
| 45 | ,, ,, | (11-19) | 883 |
| 46 | ,, ,, | (20-30) | 911 |
| 47 | ,, ,, | (31-40) | 924 |
| 48 | ,, ,, | (41-49) | 956 |


### அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.


| | | |
|---|---|---|
| 26 | ,, ,, யோகம் | 503 |
| 27 | ,, ,, ஆகாயப் பிரவேசம் | 532 |
| 28 | ,, ,, ஆகாய கமனம் | 552 |
| 29 | ,, ,, பரகாயப் பிரவேசம் | 574 |
| 30 | ,, ,, அதிரிசயம் | 588 |


### ஆண்டாள்.


| | | |
|---|---|---|
| 31 | ஆண்டாள் பிறப்பும் இளமையும் | 612 |
| 32 | ,, ,, | 628 |
| 33 | கல்வியும் கவித்திறமையும் | 643 |
| 34 | ,, ,, | 668 |
| 35 | ,, ,, | 688 |
| 36 | ,, ,, | 706 |
| 37 | ,, ,, | 723 |
| 38 | ,, ,, | 746 |
| 39 | ,, ,, | 763 |
| 40 | ,, ,, | 783 |
| 41 | கோதையார் யெளவனமும் அவர் அனுபவமும் | 803 |
| 42 | ,, ,, | 823 |
| 43 | ,, ,, | 850 |
| 44 | மதமும் சிந்தாந்தமும் | 863 |
| 45 | ,, ,, | 897 |
| 48 | ஆண்டாள் முத்திப்பேறு | 955 |
| 49 | முத்தியின் இலக்கணம் | 963 |


### மானத சாத்திரம்.


| | | |
|---|---|---|
| 26 | இடவுணர்வு | 512 |
| 27 | ,, ,, | 530 |
| 28 | ,, ,, | 550 |
| 31 | ,, ,, | 615 |
| 32 | ,, ,, | 634 |


### நவராத்திரி


508, 525, 543, 563, 583, 606, 625, 889, 905, 928, 956, 967, 985.


### சிதம்பர தேவர் சரிதம்


648, 663, 683, 708, 728, 748, 768, 785, 805, 826, 843, 865, 888, 903, 928, 950, 964.


### களவியற் காரிகை.


இதழ். பக்கம்.

38 முன்னுரை, கருப்பொருள், ... ...
எண்வகை மணம், ... ... 755
களவொழுக்கம், .... ... 756

இயற்கைப் புணர்ச்சி:—

39 நயப்பு, பிரிவுணர்த்தல், இடமணித்தென்றல், எய்தற் கருமை, உயிரென வியத்தல், பாங்கியை யுணர்தல், பாங்கனை நினைதல் ... 775, 776

பாங்கற் கூட்டம்:—

40 உற்றது வினுதல், கழறல், கழற்றெதிர் மறை, இடத்தியல் புரைத்தல், குறிவழிச்சேறல், இடங்கண்டு துணிதல், வியத்தல் 792, 793, 794.

41 நிலைகூறு கிளவி, அவயவந்தெளிதல், பொழில் கண்டு வியத்தல், திருவென வுரைத்தல், ஆற்ருன் கிளத்தல், மருங்கணைதல், ... (குறையுறுதல்) 812, 813, 814

மதியுடம்படுதேல்:—

42 பதிவினுதல், வேழம் வினுதல், கலைவினுதல், வழிவினுதல், வாய்மொழிக் கிரங்கல்... 830, 831

பகற்குறி:—

அயிர்த்துரைத்தல், சுனையாட்டுரைத்தல், சுனை வியந்துரைத்தல் ... 831, 832

43 இருவரு முள்வழி யவன்வர வுணர்தல், காவு நாட்டம், சேட்படுத்தல், மறையேல், கூறென விடுத்தல், அறியேனென்றல், அரியளர்மெனல், குலமுறை கிளத்தல், நகைத்துரையாடல், தழை மறுத்துரைத்தல், குறிப்பறிந்தேற்றல், மடற்றிறங்கூறல், குறிப்பறி வுறுத்தல், வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல் ... 847, 848, 849, 850

44 நாணெடு சூழல், முகம்புகு கிளவி, நயந்தமை கூறல், இடங்காட்டல், இடத்துய்த்தல், இடத்துய்த் தகறல், எதிர்ப்படுதல், கோலஞ்செய்துரைத்தல், உண்மகிழ்ந்துரைத்தல், கொண்டு நீங்கல். 870, 871, 872.

45 வாய்விடு கிளவி, பொழுதினுக்கிரங்கல், படருறு கிளவி, வருந்துதல் கிளத்தல், இன்றறிந்தேன், குடித்திறங்கூறல், இற்செறிவுரைத்தல், சிறைப்புறக்கிளவி, வெளிப்படவுரைத்தல், கனியென வுரைத்தல், நனைகெடச் செய்திலம், ஏறுவிடுத்தல் 885, 886, 887

இரவுக்குறி:—

46 இரவிடங்காட்டல், வரவுணர்ந்துரைத்தல், தாய்துயிலறிதல், இரவுக்குறியுய்த்தல், நீங்குதலுரைத்தல், குறியெதிர்ப்படுதல், அன்னத்தொலியுரைத்தல், கடலொலியுரைத்தல் 908, 909

47 இரவுக்குறி கழிதல் ... ... 932

கள வொழுக்கம்:—

47 கழிபடர் கிளவி, கையறுகிளவி, ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி, பகல் வரல், இரவு வரல், இரவும் பகலும் வரவொழி, தன்னுட்கையாறெய்திடு கிளவி, கடலொடு கவலல், ஆற்ருமை கூறல், வரைவது கிளத்தல், குறிப்புரை, இல்லதுரைத்தல், அலரறிவுறுத்தல், அயன்மண முரைத்தல், மணமுர சறைதல், பரிசங்கிளத்தல், 932, 933, 934, 935,

இதழ். பக்கம்.
46 உடன்போக் குரைத்தல், செலவுடன் படுத்தல், செலவழுங்கு வித்தல் ... 909, 910
கற்பு—வெளிப்படை நிலை :—
48 பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, வெறியெடுத்தல், வெறியினுக்கழிதல், வெறிவிலக்கு, முருகற்குரைத்தல், செவிலி அறத்தொடு நிற்றல், நற்றாய் தன் னையன்மார்க் கறத்தொடு நிற்றல், வரைவுடன்படுத்தல், முரசினுக்கிரங்கல், முரசு வினுதல் 943, 944, 945,
வரைபொருட்கேகல்
48 இயற்பழித்தல், இயற்படமொழிதல், தண்ப்பிடரொழித்தல் ... 945, 946
49 கையடை, விருந்து விலக்கு, பதியளவுரைத்தல். ... 976, 977
50 மேற்கோள் நூல்களைப் பற்றிய குறிப்பு ... 989

ஊழ்வினையும் ஆள்வினையும்.
545, 567, 587, 610, 627, 646, 669, 686,

மலர்வனம்.
விதியில்லா மதிபாலன் :—675, 690, 712, 726.

இதழ். பக்கம்.
கந்தபுராணமும் சங்கநூல்களும்.
895, 915, 949, 970.

பிறவிடயங்கள்.
26 நெற்குன்றவாணர் ... 510
27 தனிப்பாடல் (தமிழ்மொழிவிழைவு) ... 536
28 மதிப்புரை (சுகுணவதி) ... 539
29 இழுதையர் தன்மை, பெரியோரியல்பு ... 575
30 பெண்களின் பேதைமை ... 592
32 கலைமகள் அந்தாதி ... 825
33 குலத்தாலழுங்கல், கும்பகோணம் கொசு 686
37 முருகன் நாமம் ... 736
39 கிஷ்டாசாரமும் அதன் அம் சங்களும்... 766
40 மதிப்புரை (கோம்பி விருத்தம்) ... 797
43 பழமுதிர் சோலை (கண்படாக்கயமை) ... 857
45 மதிப்புரை—காதம்பரி ... 869
46 மதிப்புரை (உடற்பயிற்சி-நாட்டுக்கல்வி) 919
47 48, 49, தமிழிரிட்டையர் ... 926, 946 966
49 மதிப்புரை—சசிவன்ன போதம் ... 977

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு எமாமுதீர்




யுனைடெட் ஸோல் ஏஜண்டு: சுன்ஹான், மதருஸ்.
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டீலக்ஸ் மெடிகேடட்-டப்பி
பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணு 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல் இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது.
விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.



## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்ற பலகட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. [illegible] மருமை 4. மறப்பது முறுதியாமே. மெய்ம்மை [illegible] கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் [illegible] பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

188948

KALANILAYAM
REG. N.C, M 2324.

—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனம்.

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

சாரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | அரைலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப்புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவைகளுக்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த லிகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஆஸ்தி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,,86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி, 113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதாரஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரிசி, 113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

## :: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதரால்

## — திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணக்கருக்கும் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

## :: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதாரஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)